Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 29 ஆம் நாள் ஷவ்வால் 5 (11-4-62) புதன்கிழமை இதழ் 60

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

### நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தின்போது யாழ்ப்பாணநகரம் இருளில்மூழ்கியது

# மாநகரசபை கூட்டம் ஒத்திவைப்பு

## நம்பிக்கையில்லா பிரேரணை மீது 4 மணி நேரம் விவாதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மேயர் திரு. எம். ஜேக்கப்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைமீதான விவாதம் உச்சகட்டத்தை அடைந்துகொண்டிருந்தபோது மின்சார வெளிச்சக் கோளாறினல் கூட்டம் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. நம்பிக்கையில்லாப் பிரேரணையின் முடிவை அறிந்து செல்வதற்காக இரவு 8 மணிவரையில் அங்கு காத்திருந்த பெருஞ் சனக்கூட்டம் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றது.

திரு. எம். ஜோன் இரவு 7-20 மணியளவில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்துப்பேச எழுந்த இரண்டு நிமிடத்துக்குள் மின்சாரம் திடீரெனத் துண்டிக்கப்பட்டதும் கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஆணையாளர் முதலில் 10 நிமிடத்திற்குக் கூட்டத்தை ஒத்திவைத்தார். இதற்கிடையில் 'பெற்றோமாக்ஸ்' விளக்கின் உதவியைக் கொண்டு கூட்டத்தை நடத்த முயன்றபோது அதிலும் கோளாறு ஏற்பட்டு இயங்காதுவிட்டது. அரைமணி நேரம் வரையிலும் மின்சார வெளிச்சம் கிடைக்காது போகவே ஆணையாளர் 'டோர்ச்லைட் ஒன்றின் உதவியுடன் சபைக்கு வந்து அங்கத்தவர்களை அழைத்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவித்தார்.

கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஒரு சில நிமிஷங்களில் மின்சார வெளிச்சம் திரும்பவும் கோளாறு எதுவுமின்றி இருளில் மூழ்கியிருந்த நகரத்திற்கு வெளிச்சத்தைக் கொடுத்தது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.

கூட்டத்தில் ஆரம்ப முதல் சமுகமளித்திருந்த மேயர் திரு. ஜேக்கப் விளக்கணைந்து அங்கத்தவர்கள் சபையை விட்டு வெளியேறுவதும் சபைக்குள் செல்வதுமாக இருந்தபோதிலும், 'கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது' என்ற ஆணையாளரின் அறிவித்தல்வரை தமது ஆசனத்தை விட்டு அசையாதிருந்து சகலவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தார்.

### பொலிஸ் பாதுகாப்பு

மாநகர சபை அங்கத்தவர்கள் 9 பேர் கைச்சாத்திட்டு மேயர் திரு ஜேக்கப்மீதுகொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா ப்பிரேரணையைவிவாதிப்பதற்கான விசேஷகூட்டம்நேற்று மாலை 3-30 மணிக்கு மாநகர சபை ஆணையாளர் திரு. டி. டி. ஜெயசிங்கா தலைமையில் ஆரம்பமான போது கலரியிலும் மாநகரசபை வளவுக்குள்ளும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். முன்னேற்பாடாகப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாநகர சபையின் விசேட கூட்டத்திற்கான அறிவித்தலை சபைலிகிதர் திரு. வி. நவரத்தினம் வாசித்ததைத் தொடர்ந்து முன்னாள் மேயரான திரு. டி.எஸ். துரைராசா மாநகரசபைமுதல்வர்பதவியிலிருந்து திரு. ஜேக்கப்பை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்பிரேரணையைப்பிரேரித்துப்பேசினர். இப்பிரேரணையை திரு. ஜே. எஸ். அழகையா அனுவதித்தார்.

திரு. துரைராசா நம்பிக்கையில்லா பபிரேரணையை கொண்டுவந்து பேசுகையில் கூறியதாவது:-

இப்பிரேரணையை பலமுறை பல அங்கத்தவர்களுடன் ஆலோசனை செய்த பின்பே மிக மனவருத்தத்துடன் பிரேரிக்கிறேன். மேயரில் தனிப்பட்ட கோபமெதுவும் இல்லை. இது தனிப்பட்ட ஓர் ஊழலென்றால் தவிர்த்திருக்கலாம்.

### அரசியல் வாதியின் கைப்பெம்மை

முதல்வராகத் தெரிவு செய்த முதற் கூட்டதில் "15 அங்கத்தவர்களும் மாநகர சபை முதல்வர்களே" என்று அளித்த வாக்குறுதியை திரு. ஜேக்கப் காப்பாற்றத் தவறி விட்டார். மூன்று அங்கத்தவர்கள் சபையின் விசேஷகூட்டதைக் கூட்டுமாறு கேட்ட போது அதைநிராகரித்து.விட்டார்மேயராகவந்தஅடுத்தநாள் யாழ்ப்பாண எம். பி யுடன்நமாகரசபைக்குவந்தார்.மேயர்கூட்டிய பகுதித்தலைவர்கள் மகாநாட்டில் எம். பி. கலந்துகொண்டதுடன் 'பைல்' களையும் பார்வையிட அனுமதிக்கப்பட்டார். அந்தப் 'புறத்தியில் மனுஷன்' அடிக்கடி மாநகர சபைக்கு வந்து நிர்வாகங்களில் தலையிடுவதைப் பற்றிப் பலமுறையும் மேயரிடம் சொன்னேம். இந்த வகையில் அங்கத்தவர்களின் 'சொல்லு' கௌரவிக்கப்படவில்லை. மாசி மாதம் 19-ம் திகதியின்பின் சபையின் தீர்மானத்துக்கு மாறாக அரசியல்வாதிகளின

(8-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு'
புத்தாண்டு அனுபந்தம்
பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகள்
கதைகள், கவிதைகளுடன்
13-4-62 வெள்ளிக்கிழமை
வெளிவருகின்றது
16 பக்கங்கள்
தனிப்பிரதி விலை சதம் 10

# நேரு மந்திரிசபை பதவி ஏற்றது

## ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் பதவிப் பிரமாணம்

புதுடில்லி, ஏப். 10

இன்றுகாலை பிரதமமந்திரி நேருவும், 21 மந்திரிகளும் ராஷ்டிரபதிபவனில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். எளியமுறையில் இது சம்பந்தமான வைபவம் நடைபெற்றது. சர்வதேச வர்த்தகப் பிரிவுக்கான ராஜாங்க மந்திரியாக நியமிக்கப்பட்ட திரு. ஷா, தமது பதவியை ஏற்றுக்கொள்ளாததால் அவர் வரவில்லை. நேருவும் 8 மந்திரிகளும் ஹிந்தியிலும், இதர மந்திரிகள் ஆங்கிலத்திலும் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர். மேற்கு வங்க கவர்னர் ஸ்ரீமதி பத்மஜா நாயுடு, காஷ்மீர் பிரதமர் திரு. பக்ஷிகுலாம் முகம்மது ஆகியோர் இவ்வைபவத்தைப் பார்வையிட்டனர். பின்னர் மந்திரிகள், ராஷ்டிரபதியுடன் புகைப்படம் பிடித்துக்கொண்டனர். மந்திரிசபையின் முதற் கூட்டம் ராஜ்டிரபதிபவனில் நடைபெற்றது. பதவி ஏற்க மறுத்த திரு. மனுபாய்ஷா, தற்போதைய நிலையில் தாம் ஏற்றுமதி அபிவிருத்திகளை செம்மையாக நடத்திவைக்க முடியாது எனக் கருதுவதால்தான் தாம் பதவிஏற்கவிரும்பவில்லை எனக் கூறியிருக்கிறார்.

## சமயக்கல்வி

### டோக்கியோவில் மந்திரி மாமூத் வலியுறுத்தல்

டோக்கியோ, ஏப். 10

டோக்கியோவில் நடைபெறும் ஐ. நா. கல்வி, விஞ்ஞான கலாசார ஸ்தாபனத்தின் மகாநாட்டில் நடுத்தரப் பாடசாலைகளில் சமயக்கல்வி அளிப்பது பற்றி இன்று விவாதம் நடைபெற்றது. நடுத்தரப் பாடசாலைகளில் சமயக்கல்வி கற்பிக்கப்பட வேண்டியது அவசியம் என்று இலங்கை கல்விமந்திரி ஜனுப் பதியுதீன் மாமூத் மகாநாட்டில் வலியுறுத்திப் பேசினர்.

பிலிப்பைன்ஸ், இந்தியா, ஈரான் ஆகிய நாடுகள் நடுத்தர வகுப்புக்களில் சமயக் கல்வி சாத்தியமாகாது என்று தெரிவித்தார்.

சமயக்கல்வி விஷயம் அந்தந்த நாடுகளின் இஷ்டப்படி செய்து கொள்ளலாமென மகாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

# வெளிநாடுகளிலுள்ள இலங்கை மாணவர்

## அரசாங்கத்தின் புதிய நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க உதவியின் பெயரால் உபகாரச் சம்பளம் பெற்று வெளிநாடுகளுக்குக் கல்வி பயிலச் செல்லும் மாணவர்கள்மீது அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கத் தீர்மானித்துள்ளது.

இது காரணமாக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராலயங்களை, அந்த நாடுகளிலுள்ள இலங்கை மாணவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது. இம்மாணவர்கள் பயிலும் கல்வி ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் தேர்ச்சிபற்றி அறியுமாறும் தூதராலயங்களை அரசாங்கம் கேட்டுள்ளது.

வெளிநாடுகளின் பண உதவியுடன் வெளிநாடுகளில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள்மீதும் இலங்கை அரசாங்கம் மேற்பார்வை செலுத்தவிருக்கிறது. இந்த மாணவர்கள் பற்றியும் கவனமெடுக்குமாறு வெளி நாடுகளிலுள்ள இலங்கைத் தூதராலயங்களை அரசாங்கம் கேட்டுள்ளது.

வெளிநாடுகளில் விசேஷ கல்விக்குச் சென்றுள்ள மாணவர் தொகையின் பெயர்ப்பட்டியல் ஒன்றை இலங்கை அரசாங்கம் தயார் செய்கிறது. அவர்கள் பாண்டித்தியம் பெறும் துறைகளில், அவர்களுக்கு வேலை வழங்கும் பொருட்டு, இந்தப்பட்டியல் தயாராகிறது.

வெளிநாட்டமைச்சின் பொருளாதாரப் பகுதியும், திறைசேரியின் பொருளுதவிப் பகுதியும் வெளிநாடுகளுக்கான உபகாரச் சம்பளங்களை ஆராய்ந்து வருகின்றன.

## வரி விளம்பரம்


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.


## அறிவித்தல்

21-4-62 சனிக்கிழமை காலை பத்து மணிக்கு கோப்பாய் கிராமசபைத் தலைவரால், கோப்பாய் தெற்கு விநாயகர் வீதி ரூட்டு வேலைக்கு "சீல்" வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வடபகுதி (மேல்) உள்ளூராட்சி உதவி அதிபரின் காரியாலயத்தில் ரூ. 5,000 க்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் கேள்விப்பத்திரங்கள் 19-4-62-ம் திகதிக்குமுன்வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம் ரூ.5'ம்,கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூ. 20ம் செலுத்தப்படவேண்டும். பத்திரப்பணம் ரூ. 5ம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

மேற்கொண்ட விபரங்களை துவும் எனது காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. இராசரத்தினம்,
தலைவர்,
கிராமச்சபை-கோப்பாய்
9-4-62.


### ஆள் தேவை

பத்திரிகை சப்ளை செய்வதற்கு இருவர் தேவை. நேர்மையுள்ளவராக இருக்கவேண்டும். வயது 18லிருந்து 20க்குள் இருக்க வேண்டும். விரும்புவோர் நேரில் வரவும். "யாழ் பீடா", N. S. திருநாவுக்கரசு, 168, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.


## ORDER NISI

In the District Court of Jaffna

In the matter of the Intestate Estate of the late Sithamparan Kanthan of Chankanai Deceased.

Kanthan Mylu of Chankanai Petitioner.

Testamentary Jurisdiction } No. 1114

Vs

1. Kandan Vallipuram, Barber Saloon, Vavuniya.
2. Kandan Chinniah of Maviddapuram Respondents

This matter coming on for disposal before V.M. Comarasamy Esquire, Acting District Judge, Jaffna on the 23rd day of February 1962 in the presence of Mr.S.T. Nadarajah, Proctor on the part of the petitioner and the affidavit and petition of the petitioner having been read:

It is ordered that letters of Administration over the estate of the said deceased be issued to the petitioner as the son of the deceased unless the respondents or and other person or persons shall on or before the 11th day of April 1962 appear before this court and show sufficient cause to the satisfaction of this court to the contrary. The 23rd day of Feburay 1962.

Drawn by:-
Sgd. S. T. Nadarajah
Proctor for Petitioner.

Sgd. Sivagnanasundram
*District Judge.*

## இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான்செ.தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனித் திங்கள் 29-ந் தேதி புதன் கிழமை (11-4-62) ஹிஜ்ரிவருடம் 1381, துல்கஃதா மாதம் 5-ம் பிறை.

இன்று ஸப்தமி பகல் 5-42 பின்னர் அட்டமி. பகல் 2-06 வரை திருவாதிரை, பின்னர் புநர்பூசம். சித்தயோகம். இராகுகாலம் 12-06 முதல் 1-36 வரை.

திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளலாகாது.

### இராசிப்பலன்

திருவாதிரை — புநர்பூசம்: இன்று இவர்களுக்கு வாழ்க்கை நலம், நன்முயற்சி, உறவினர் நட்பு, கடன் தொல்லை, வாக்குக் கஷ்டம் ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: பிரயாண நலம், வர்த்தக இலாபம், பணவரவு தடை, வித்தியாவிருத்திதடை.

இடபம்: தொழில்வருவாய், உழைப்புப் பலன், செலவு, கடன்படல், நல்லோர் நட்பு.

மிதுனம்: கடன்தொல்லை நீக்கம், நண்பர் உதவி, ஏமாற்றம், நற்செய்தி, சுகம்.

கடகம்: சுபபொழுது கழிதல், விவாக செய்தி, உறவினர் சேர்க்கை, பணமுடை.

சிங்கம்: பொதுசன ஆதரவு, தெய்வ வழிபாடு, பிரயாண கஷ்டம், தருமவழி செலவு, சுகம்.

கன்னி: சுபகாரியநலம், மாதுருவழி பகை, குடும்பச் சச்சரவு, ஊழியர் உதவி, மதிப்பு.

துலாம்: தொழில் நன்மை, வீண் பகை, எதிர்ப்பு, வர்த்தக நன்மை, மதிப்புயர்ச்சி.

விருச்சிகம்: நல்லோர் நட்பு, தைரியம், பணவரவு, செய்காரியகேடு, பணமுடை.

தனு: வாக்குவன்மை, கடும் உழைப்பு பலன், மதிப்புயர்ச்சி, ஊழியர் தொல்லை, நட்டம்.

மகரம்: தொழில் நலம், கடன் வரவு, உறவினர் தொல்லை, முயற்சி வெற்றி, தைரியம்.

கும்பம்: வீண்கஷ்டம், பயம், வண்டி வாகன நலம், தெய்வ வழிபாடு, பணவரவு.

மீனம்: பணவரவு, வர்த்தக லாபம், பிரயாணக் கஷ்டம், நம்பி ஏமாற்றம், தைரியம்.

டெஸ்ட்கிரிக்கெட்

## மேற்கிந்திய கோஷ்டி வெற்றி

போர்ட்ஆப்ஸ்பெயின், ஏப். 10

இந்தியாவுக்கும். மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையே நடைபெற்ற 4-வது கிரிக்கெட் டெஸ்ட்டில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மேற்கிந்தியக் கோஷ்டி வெற்றிபெற்றது.

மேற்கிந்தியக்கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 9 விக்கட் நஷ்டத்திற்கு 444 ரன்களும், 2வது இன்னிங்ஸில் 3 விக்கட் நஷ்டத்திற்கு 176 ரன்களும் எடுத்தது.

இந்தியகோஷ்டி முதல் இன்னிங்ஸில் 197 ரன்களும், 2வது இன்னிங்ஸில் 422 ரன்களும் எடுத்தது. இதுவரை நடைபெற்ற 4 டெஸ்ட்டுகளிலும் மேற்கிந்தியக்கோஷ்டியே வெற்றிபெற்றிருக்கிறது.

## "தர்மத்தை விற்காதீர்கள்" —தேரோ

வத்தளை, செவ்வாய்

"தர்மத்தை விற்று வாழ்க்கை நடத்தாதீர்கள். சுயநலத்திற்காக தர்மத்தைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து அதைப் பாவிப்பதே சகல பௌத்தர்களினம்து கடமையாகும்" என சித்தார்த்த மகாநாயக தேரோ இங்கு கூறினர்.

## கதம்ப விழா ஆரம்ப தேர்வு விபரம்

சாவகச்சேரி, செவ்வாய்

சாவகச்சேரி வட்டாரக் கதம்ப விழா ஆரம்பத் தேர்வு நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்கள்.

**சங்கீத அபிநயப் பாட்டு**

1-ம் இடம்: சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்.

2-ம் இடம்: மீசாலைவிக்கினேஸ்வர வித்தியாலயம்.

3-ம் இடம்: கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.

**பாட்டு.**

1-ம் இடம்: ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்.

2-ம் இடம்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

3-ம் இடம்: மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலயம்.

**கிராமியப் பாட்டு**

1-ம் இடம்: கல்வயல் ஸ்ரீ சண்முககனந்த வித்தியாலயம்.

2-ம் இடம்: மீசாலை விக்னேஸ்வர வித்தியாலயம்.

**கீழத்தேய நடனம்.**

1-ம் இடம்: சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்.

**நாடகம்.**

1-ம் இடம்: சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்

2-ம் இடம்: மீசாலை விக்னேஸ்வர வித்தியாலயம்

3-ம் இடம்: மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்.

மத்தியட்சகர்களாகச் சங்கீத பூஷணம்கள் திரு. எஸ். விஜு சித்தம்பியும், திரு. வி. நடேசனும் இளைப்பாறிய வித்தியாதரிசி திரு. எஸ் இராமலிங்கமும் கடமையாற்றினர்.

## ஆசிரியர் சங்க மகாநாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ் தராதரப்பத்திர ஆசிரிய சங்க மகாநாடு எதிர் வரும் 21-4-62 சனிக்கிழமை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அத்தருணம் கல்வி அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஜினதாச பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார் மேலும் வடமாகாண உதவிவித்தியதிபதிதிரு. சோமசேகரமும் வித்தியாதிபதி திரு தணிகாசலமும் பல ஆசிரியர்களும் பங்குபற்றிச் சொற்பொழிவுகள் நிகத்துவர்.

இலங்கையில் ஆசிரிய நியமனம் மாற்றம் ஆகியவற்றின் உயதர அதிகாரி பதில் உதவி வித்தியாதிபதி திரு. துரைசிங்கம் ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

மகாநாட்டில் சகல தமி ஆசிரியர்களும் பங்கு பற்றலாம். கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## இஸ்ரேல்மீது ஐ. நா. கண்டனம்

நியூயோர்க். ஏப். 10

ஸிரியாவின் எல்லையில் தாக்குதல் நடத்தியதற்காக ஐ. நா. பந்தோபஸ்துசபை நேற்று இஸ்ரேலைக் கண்டனம் செய்தது. பிரிட்டனும், அமெரிக்காவும் பிரேரணைசெய்த கண்டனத் தீர்மானத்தை பாதுகாப்புசபை நிறைவேற்றியது. இவ்விஷயத்தில் இனி இஸ்ரேல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என பிரேரணை கூறியது.

## கொதிநீரில் விழுந்தவர் மரணம்

கொழும்பு, திங்கள்

திவுலப்பிட்யா தெங்குப் பொருள் தொழிழசாலை ஒன்றில் வேலைபார்த்து வரும் வின்னி என்னும் 19 வயதுத் தொழிலாளி கொதித்துக்கொண்டிருந்த தண்ணீர் தொட்டி ஒன்றினுள் தற்செயலாக விழுந்து விட்டார். கொழும்பு ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் அங்கு மரணமானர். தேங்காய் கொப்பராவை சுத்தி செய்வதற்கெனத் தண்ணீர் கொதிக்க வைக்கப்பட்டிருந்தது.

# வேலணையில் திருக்குறள் மகாநாடு

## பல அறிஞர்கள் கலந்துகொள்வார்கள்

வேலணை. செவ்வாய்

தமிழ் மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மகாநாடு வேலணை வாலிபர்முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் வேலணையில் மே திங்கள், 18, 19, 20ம் நாட்களில் நடைபெறும்.

டில்லி பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியர் சாலை இளந்திரையன் எம். ஏ. எம். லிற் அவரது மனைவியார் திருமதி கனகசவுந்தரி இளந்திரையன் எம். ஏ. எம். லிற், திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு ஜயன் பெருமாள் கோனர்ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள் இவர்களுடன் ஈழநாட்டுத் தமிழ்ப் பேரறிஞர்களும் உரைவிருந்தளிப்பர். திருக்குறள் ஏட்டுச்சுவடி ஊர்வலம் கருத்தரங்கு, கவியரங்கு, இசை அரங்கு, நடன அரங்கு, நாடகம், திருக்குறள் ஓவியக் காட்சி முதலிய பல்வேறு நிகழ்ச்சிகள் மகாநாட்டில் இடம் பெறும்.

சென்றஆண்டில் அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வில் பரிசில் பெற்றவர்களுக்கு இம்மாநாட்டில் பரிசில்கள் வழங்கப்படும்.

இம்மாநாட்டின்போது குடிசைக்கைத்தொழில்- சிறுகைத்தொழிற் பொருட்காட்சி ஒன்றினையும் நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

## மயிலிட்டிக் கழகம் வெற்றியீட்டியது

சுன்னகம், செவ்வாய்

தையிட்டி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் மயிலிட்டி விளையாட்டுக் கழக வீரர்கள், தையிட்டி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தாரை 2--0 கோல்களால் வெற்றியீட்டினர்.

# இலங்கையரல்லாதாருக்கு சலுகை அளிக்கக்கூடாது

## வீடமைப்பு கமிட்டியிடம் சோனகர் சங்கம் மகஜர்

கொழும்பு, செவ்வாய்

இலங்கையரல்லாத குடியிருப்பாளர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கும், வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் கட்டுப்பாடற்ற வாடகை செலுத்துமாறுசெய்ய வேண்டும் என அகில இலங்கை சோனகச் சங்கம் வீடமைப்பு விசேஷக் கமிட்டியிடம் தெரிவித்திருக்கிறது.

"இந்நாட்டு மக்களைக் கொண்டு பெரும் சுபீட்சமடையும் இலங்கையரல்லாத குடியிருப்பாளர்கள் தங்கள் இல்லங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவற்றை விட்டு வெளியேறி, அவைகள் இலங்கை வர்த்தகர்களுக்குக்கிடைக்கும்படி செய்ய நிர்ப்பந்திக்கப் படவேண்டும். வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வரும் ஏராளமான இடங்களை இலங்கையரல்லாதவர் ஆக்ரமித்திருக்கின்றனர். வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இலங்கையர்களைப் பாதுகாக்க இயற்றப்பட்ட இச்சட்டம் அவர்களுக்குப் பயன் படுகிறது. இலங்கையரல்லாத காணிச் சொந்தக் காரர்களுக்கும் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்ட உரிமை இருக்கக் கூடாது" என்றும் சோனகர் சங்கம் கூறியிருக்கிறது.

## தெல்லிப்பழையில் சங்காபிஷேகம்

தெல்லிப்பழை, செவ்

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயத்தில் சென்ற ஞாயிற்றுக் கிழமை, மாலை வருடாந்த சங்காபிஷேகமும், அதன்பின் கூட்டுப்பிரார்த்தனையும் செல்விகள், ச. ரவினி, சு. சரோஜினிதேவி, செல்வன் கு. தவராஜசிங்கம் ஆகியோரின் கதாப்பிரசங்கமும், பிரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ணனது இன்னிசைக் கச்சேரியும், க. சிவபாலசுந்தரத்தின் புல்லாங்குழல் கச்சேரியும், செல்வன் நா. சாந்தலிங்கத்தின் மிருதங்கக் கச்சேரியும் நடைபெற்றன.

## கிரிக்கெட் போட்டி

காங்கேசன் துறை, செவ்வாய்

காங்கேசன் துறை சிமெந்தித் தொழிற்சாலைக் கிரிக்கட் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் சுகாதார இலாகா கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இப்போட்டி சிமிந்தித் தொழிற்சாலை மைதானத்தில் நடைபெற்றது.


## கோழிக் குஞ்சுகள்

60 சதம்

உயர்தர ஒரு நாள் வெள்ளை லெக்கோன் கோழிக் குஞ்சுகள்.

70 சதம்

மற்றைய சாதிகள்

முன் கூட்டிய ஆடர்களை முற்பணம் 50 வீதம் கட்டி பதிவு செய்து கொள்ளலாம்.

முட்டை அடைவைக்கும் விபரங்கள்

1-ம் 100க்கு 15 சத விகிதம்
2-ம் 100க்கு 14 சத விகிதம்
3-ம் 100க்கு 13 சத விகிதம்

**தேசிய அவயகூடமும் கோழிச் சேவையும்**

கூளாவடி, ஆனைக்கோட்டை.

# "8 மாதங்களில் இரியனை ஒப்படைக்க வேண்டும் இன்றேல் யுத்தம் ஆரம்பிப்போம்"

## டாக்டர் சுகர்ணே எச்சரிக்கை

ஜாகர்த்தா, ஏப்ரல் 10

**"இன்னும் 8 மாதங்களில் மேற்கு இரியனை டச்சுக்காரர்கள், இந்தோனேஷியா வசம் ஒப்படைக்காவிட்டால் யுத்தத்தை ஆரம்பிப்போம்" என ஜனாதிபதி சுகர்ணே அறிவித்தார்.**

"ஐ நா. மேற்பார்வையில் 2 வருடத்தில் படிப்படியாக மேற்குஇரியான் அதிகாரத்தை இந்தோனேஷியா ஏற்கவேண்டுமென்ற அமெரிக்கத் திட்டத்தைக் கொள்கைஅளவில் ஏற்கிறேம். ஆயினும் இவ்வாண்டு மேற்கு இரியானை விடுதலை செய்வதென உறுதிகொண்டிருக்கிறேம். இந்தோனேஷியா சமாதானத்தையே விரும்புகிறது. ஆனல் சுதந்திரத்தை அதைவிட அதிகமாக விரும்புகிறது" என்றும் டாக்டர் சுகர்ணே கூறினர்.

### ராமநாதன மரணச் சடங்கு

கொழும்பு, செவ்வாய்

இலங்கைத் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் உதவிக் காரியதரிசியாகயிருந்த திரு. பி. ராமநாதனின் மரணச் சடங்குகள், நேற்று கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

53 வயதுள்ள திரு. ராமநாதன், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நித்திரையின் போது காலமானர்.

### பார்லிமெண்ட் திங்களன்று கூடும்

கொழும்பு, செவ்வாய்

ஜனப்பிரதிநிதிகள் சபை, முன்னர் குறிப்பிட்டபடி அல்லாது ஒரு நாள் முன்னதாக, எதிர்வரும் திங்கட்கிழமை கூடும். இது சம்பந்தமான அறிவித்தலை கவர்னர் ஜெனரல் இன்று கெசட் மூலம் வெளியிடுவார் எனத்தெரிகிறது.

### படகு பழுது அடைந்ததால் கஷ்டம்

ஊர்காவற்துறை, செவ்வாய்

ஊர்காவற்றுறைக்கும் காரை நகருக்குமிடையே செல்லும் "மருதபுரவி" என்ற இயந்திரப் படகு, கடந்த 3 வாரங்களாக பழுதடைந்திருப்பதால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமடைந்துள்ளனர்.

## "பிரிவினை சக்திகளை இறுதி வரை எதிர்ப்போம்"

### ம. பொ. சி. அறிவிப்பு

சென்னை, ஏப். 9

"மக்களிடையே வேற்றுமையை வளர்க்கும் பிரிவினைச் சக்திகளை தமிழரசுக் கழகம் இறுதிவரை எதிர்த்துப் போராடும்" என்று தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணி நேற்று சூளையில் அவ்வை படிப்பகத்தின் ஆதரவில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

தேசிய ஐக்கியம், சோஷலிஸம், மாகாண சுயநிர்ணயம், ஆகியவைகளை எதிர்க்கும் ஒரு கட்சியை ஆதரிப்பதால் ஏற்படக்கூடிய அபாயத்தை தமிழரசுக்கழகம் மறந்துவிட முடியாது என்றும் திரு. கிராமணி கூறினர்.

ராஜ்யங்களுக்கு சுயாட்சி கொடுக்கப்பட்டால் மமிழரசுக் கழகம் தொடர்ந்திருக்க வேண்டிய அவசியமேற்படாது என்றும் அவர் சொன்னர். தி. மு. கழகத்தின் திராவிட நாட்டுக் கோரிக்கைஅடிப்படையிலேயே தவருனதென்றும் இக்கோரிக்கையை எல்லோரும் உறுதியுடன் எதிர்பார்க்க வேண்டுமென்றும் திரு. கிராமணி கேட்டுக்கொண்டார்.

### தற்காலிக வெளிநாட்டு நிரந்தரக் காரியதரிசி

கொழும்பு, திங்கள்

ஏப்ரல் 12 லிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். டபிள்யு. எப். அபயக்கூன், வெளிநாட்டமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகவும் கடமையாற்றுவார். வெளிநாட்டமைச்சின் பதில் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ் 6 நாட்களுக்கு விடுமுறை கோரியுள்ள காரணத்தால் இந்தக் கடமையைச் சில தினங்களுக்கு ஏற்பதற்குத் திரு அபேயக்கூன் நியமிக்கப்பட்டுள்ளார்.

காட்மாண்டு, ஏப். 8

"தனது அண்டநாடுகளான இந்தியவுக்கும் 'சிண்டு முடிந்து விட்டு' அதன் மூலம் இலாபம் பெறுவது நேப்பாளத்தின் கொள்கையல்ல என்று நேப்பாளத் நிதி மந்திரி திரு. ரிஷிகேஷ்ஷா தெரிவித்தார்.

தனது அண்டை நாகளுடன நட்புறவுடன் வாழ்வதுதான் நேப்பாளத்தின் கொள்கையென்று திரு. ஷா கூறினர்.



பம்பாயைச் சேர்ந்த 25 வயதான ஸூபின் மேத்தா, லண்டன் ராயல் வைபவ மண்டபத்தில் இசைப்பயிற்சி அளிக்கிருர். திரு. மேத்தா 1958ம் ஆண்டு லிவர்பூல் சர்வதேச இசைப் பயிற்சிப் போட்டியில் வெற்றிபெற்றவராகும்.

## மீன்கள் கெடாதிருக்க மதுபானம் ஊட்டல்!

### ஜப்பானிய விஞ்ஞானியர் கண்டுள்ள புதுவழி

டோக்கியோ, ஏப் 10

கடலிலிருந்து பிடிக்கப்பட்ட மீன்களைப் பழுதடையாவண்ணம் மார்க்கட்டுக்குக்கொண்டு செல்ல, ஜப்பானிய விஞ்ஞானிகள் புதிய சுலபமான முறையொன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

தென் ஜப்பானிலுள்ள ஹிரோமசி என்ற இடத்திலுள்ள கூட்டுறவு மீன்பிடி நிலையத்தைச்சேர்ந்த விஞ்ஞானிகள்தான் இந்தப் புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளனர். ஒரு இடத்திலிருந்து மற்றுமொரு இடத்துக்கு புகையிரதமார்க்கமாக மீன்களை அடைத்து அனுப்பும்பொழுது இந்த விஞ்ஞானிகள், மீன்களுக்கு மதுபானத்தை ஊட்டி விடுகின்றனர். இதனல் மீன்கள் நித்திரை செய்வதுடன் அவைகளுக்கு எந்தவித கெடுதியும் ஏற்படாது கடலில்வாழ்வதுபோலவே இருக்கும். இப்படித் தனித்தனியாக அனுப்பப்படும் மீன்கள் மற்ற மீன்களிலும் பார்க்க இரட்டை விலைக்கு விற்பனைசெய்யப்படுகிறது.

இதுபற்றி கூட்டுறவு அதிகாரிகள் தெரிவிக்கையில், இவ்விதமாக 'பாக்' பண்ணப்படும் மீன்களைச் சாப்பிடுவதால் எவ்வித மணமோ அல்லது கெடுதியோ இல்லை என்று கூறினர்.

## "யுத்தம் வந்தால் வெற்றி தோல்வி இருக்காது"

### திரு. மேனன் கருத்து

பம்பாய், ஏப்.8

"யுத்தம் ஒன்று ஏற்பட்டால் வெற்றி பெற்றவர் என்றே தோல்வியடைந்தவர் என்றே எவரும் இருக்கமாட்டார். ஏனெனில் அகில உலகமுமே நாசமாகிவிடும்" என்று இந்திய பாதுகாபபு மந்திரி திரு. வி கே. கிருஷ்ணமேனன் வடபம்பாயில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"யுத்தத்தைச் சட்டவிரோதமாக்குவதற்கு முதற்படியாக படைகுறைப்புக்கு வல்லரசுகள் இணங்க வேண்டுமென்று திரு. மேனன் கேட்டுக் கொண்டார்.

உலகத்தைப் பல தடவைகள் அழிக்கப் போதுமான அணு ஆயுதங்களை இரு பகுதி வல்லரசுகளும் வைத்துள்ளன. அப்படியிருந்தும் இன்னும் இன்னும் அதிக ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் அவர்கள் ஈடுபட்டிருப்பதுதான் விசித்திரமாகவிருக்கிறது" என்று திரு. மேனன் கூறினர்.

யுத்தமா? சமாதானமா? என்பதுதான் இன்று மிக முக்கியமான உலகப் பிரச்சினையென்று இந்தியா கருதுகிறது என்று திரு. மேனன் கூறினர்

### ஐ. அ. குடியரசு 30 லட்சம டன் பெட்ரேல் அனுப்புகிறது

கொழும்பு, திங்கள்

ஐக்கிய அரபுக் குடியரசு 30 லட்சம் கலன் பெட்ரோலை இங்கு அனுப்பிவைக்கிறது 'சுப்பீரியர்' என்னும் ஐ. அ. கு. கப்பல் இந்த 30 லட்சம் கலன் பெட்ரோலையும் வெகு விரைவில் இங்கு கொண்டு வந்து சேர்க்கும்.

பெட்ரோலியம் கார்ப்பரேஷன் அதிகாரியொருவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

### அத்தியடிப்பிள்ளையார் கோயில் திருவிழா

யாழ்ப்பாணம், செவவாய்

யாழ்ப்பாணம், அத்தியடி சிதம்பர நடராஜ விரகத்தி விநாயகர் கோவில் 5-ம் திருவிழா இன்று நடைபெறுகிறது பகலில் விசேஷ அபிஷேகாராதனையும் இரவு மேளக்கச்சேரியும் திருமுருககிருபானந்தவாரியாரின் தம்பியார் திருமாமணை சிவம் காரைக்காலம்மையார்' என்னும் பொருள் பற்றி நிகழ்த்தும் சங்கீத கதாப் பிரசங்கமும் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.



எட்வினு மவுண்பேட்டன் ஞாபகார்த்த நிதிக்கு 4563 பவுண் செக் ஒன்றை, லண்டனிலுள்ள நைஜீரிய ஹைகமிஷனர் திரு. அல்ஹாஜீ அப்துல்மாலிகி, லைகவிண்ட்மாங்கனிடம கையளிக்கிருர். இதுவரை இந்நிதிக்கு 1,15,000 பவுனுக்குமேல் வசூலாகியிருக்கிறது. இந்தியாவில் லேடி மவிண்ட்பேட்டன் ஞாபகார்த்த நிதிக்கு 1961ம் ஆண்டு இறுதிவரை 91,455 பவுண் சேர்ந்துள்ளது.

For Your Textile Requirements

Colombo Textiles

Importers, Wholesalers & Retailers of Textiles

192, K. K. S. Road, JAFFNA.

கொழும்பு ரெக்ஸ்ரைல்ஸ்

இறக்குமதியாளர், மொத்த-சில்லறை பிடவை வர்த்தகர்.

192, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான பட்டு பருத்தி நூல் கைத்தறிப் பிடவைகளுக்கு எங்களிடம் வாருங்கள்!

**மணி வாக்கு**

"அன்புக்குக் குன்றையை நிறைவாக்கத் தெரியுமே தவிர வேறெதுவும் தெரியாது."


# ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 29உ (11-4-62)


## தேசியக் கல்வி மகாநாடு

கண்டியிலே நடைபெற்ற தேசியக் கல்வி மகாநாட்டில் பல தலைவர்கள் முக்கியமான பல நல்ல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றை அரசாங்கம் பரிசீலனை செய்து, பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

உதாரணமாகக் கல்வி முறையில் குழந்தைகளுக்கிடையே வேற்றுமை காட்டக்கூடாதென்பதை, அரசியல் ஞானியான திரு. வில்மட்பெரேரா வற்புறுத்தினர். ஐ. நா. சாசனம் குழந்தைகளின் சம உரிமையைவற்புறுத்தியுள்ளது. ஐ. நா. ஸ்தாபன அங்கத்தினரென்ற முறையில் இலங்கை அந்த சாசனத்தை மதித்து இங்குள்ள குழந்தைகளுக்குள் வேற்றுமை பாராட்டாது எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கற்க சரிசமமான சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டுமென்றும், ஆனல் தோட்டப் பள்ளிக்கூடங்களை தேசிய கல்வித் திட்டத்திலிருந்து ஒதுக்கியது, துரதிருஷ்டமாவதுடன், ஐ. நா. சாசனத்துக்கு மாறுமென்றும் அவர் இடித்துக் காட்டியிருக்கின்றார். இதே விஷயம் பற்றி ஏற்கெனவே திருவாளர்கள் தொண்டமான், அஸீஸ், ராஜலிங்கம் இவர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். கட்சிப் பற்றற்ற அரசியல் விவேகியும் அரசாங்கத்தின் மதிப்புக்குரியவரும் சிங்களத் தலைவருமான திரு. வில்மட் பெரேராவே கூறியுள்ள இக் கருத்தை அரசாங்கம் எக்காரணம் பற்றியும் அலட்சியம் செய்ய முடியாது.

"தேசியம்" என்ற போர்வையிலே, பல விஷமங்கள் மறைந்து கிடக்கலாமென்றும், கல்வியைப் பொறுத்தவரை, "தேசியம்" என்ற சொல்லையே விட்டுவிட்டு, கொள்கைகளை மட்டும் குறிப்பிட வேண்டுமென்று சரியாகக் கூறுகிறார். கண்டி கிங்ஸ்வுட் கல்லூரி அதிபரான கென்னத் டி' லானரோல், குறுகிய தேசியம், வகுப்பு வாதத்தை வளர்க்கவும், நாட்டு மக்களின் ஒற்றுமையைக் குலைக்கவும் செய்யும். "தேசியம்" என்ற பெயரால், வகுப்புத் துவேஷத்தை சில விஷமிகள் கிளப்பிவிட்டதையும், இனியும் இவ்விதம் செய்யக் காத்திருப்பதையும் பலரும் அறிவர். இது காரணமாகவே நாட்டில் ஒற்றுமை குலைந்து, அவலநிலை ஏற்பட்டுள்ளது. குறுகிய "தேசியத்தை" விட்டு, விரிந்த முறையில் கல்விக் கொள்கைகளை வகுக்க முற்பட்டாலே, இன்றைய அவலநிலை மாற வழிபிறக்கக்கூடும்.

வேலையில்லாக் கஷ்டம் அதிகரித்துள்ளதை திரு. எம். சிவசிதம்பரம் அதே மகாநாட்டில் சுட்டிக்காட்டினர். ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 600 பேர் வேலை தேவை என்று பதிவு செய்திருப்பதாயும், இந்த எண்ணிக்கையைவிட பல மடங்கினர் வேலையின்றியோ, குறைந்த அளவு வேலையுடனே சங்கடப்படலாமென்றும், தவறான கல்விக் கொள்கையே இந்தச் சங்கடத்துக்குக் காரணமென்றும் அவர் கூறினர். இன்றைய கல்வி முறை குமாஸ்தாக்களை உற்பத்திசெய்வதாகவுள்ளது சொந்தத்தில் தொழில் செய்து வாழ மாணவர்களுக்கு பயிற்சி கிடைக்கவில்லை. இப்பெருங்குறை, உடுப்பிட்டி மெம்பர் கூறியதுபோல் நீங்கவேண்டும்.

"கல்வி மூலம் தேசிய ஒற்றுமை" எனும் விஷயமாக டாக்டர் கே. ராசையா பேசுகையில், பலாத்காரத்தாலோ, ஆதிக்கத்தின் மூலமோ வேற்றுமை காட்டுவதாலோ, தேசிய ஒற்றுமையை வளர்க்கமுடியாதென்று வற்புறுத்தினர். இன்றைய கல்விக் கொள்கை, மாணவர்களிடையே பிளவு ஏற்படுத்துவதாகவுள்ளது. கல்வித் துறையிலே பெரிய வேற்றுமை காட்டப்படுவதாகவும் அவர் இடித்துச் சொன்னர்.

இம்மகாநாட்டில் பேசிய இத்தலைவர்கள் கட்சி அரசியலில் சிக்கியவர்களாவர். நாட்டின் மேலான நன்மையைக் கருதி அனுபவமிக்க இத்தலைவர்கள் கூறியுள்ள மேற்குறித்த யோசனைகளை. அரசாங்கம் மதித்து, தக்க நடவடிக்கை எடுப்பின், நாட்டின் நிலைமை மேம்படவும், மக்கள் நல்வாழ்வு வாழவும் வழிபிறக்கலாம் இன்றேல் நிலைமை மேலும் மோசமாகும்.

# யாழ்ப்பாணத்தில் சிகரெட் புகையிலை உற்பத்தி

## கமக்காரரின் இன்றைய பிரச்சினைகள்

**யாழ்ப்பாணக் கமக்காரனுக்குக் கைகொடுத்துவந்த மலையாளப் புகையிலை விற்பனை ஒப்பந்தம் முன்போல் நீடிக்குமென்பதற்கில்லை. இந்நேரத்தில் சிகரெட் புகையிலை உற்பத்தியை இங்கு விருத்தியாக்குவதில் அக்கறை காட்டப்படுகிறது. இந்தவகையில் யாழ்ப்பாணம் சிகரெட் புகையிலை உற்பத்தியாளரின் இன்றைய பிரச்னைகள்பற்றி யாழ்ப்பாணம் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சமாசக் காரியதரிசி திரு. க. இ. குமாரசாமி இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் சிகரெட் புகையிலை செய்யும் 42 சங்கங்கள் இருக்கின்றன. 1951-ல் யாழ்ப்பாணத்தில் சிகரெட் புகையிலைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டு 1958-ல் 800 ஏக்கரில் செய்யப்பட்டது. சிகரெட் புகையிலை உற்பத்தி உலர்த்தற் செலவுகள் படிமுறையே கூடி வந்துள்ளன. அதற்கேற்றவாறு சிகரெட் புகையிலை விலையோ கூடவில்லை. இதனல் கமக்காரர் மனமிழந்து சிகரெட் புகையிலைச் செய்கையில் நாட்டம் குறைந்துகொண்டே வந்துள்ளனர். இதனல் இவ்வருடம் 500 ஏக்கரில் மாத்திரமே யாழ்ப்பாணத்தில் செய்யப்பட்டுள்ளது.

### விலை அதிகரிக்கப்படல் வேண்டும்

சிகரெட் புகையிலை விலை கூட்டப்படல்வேண்டும்.

இன்று சிகரெட் புகையிலைக்கு இலங்கைப் புகையிலைக் கம்பெனியாரால் கொடுக்கப்படும் விலைகள் பின்வருமாறு:-

1-ம் தரம் 3-50, 2-ம் தரம் 3-00, 3-ம் தரம் 2-75, 4-ம் தரம் 1-50, 5-ம் தரம் 1-25, 6-ம் தரம் 1-00.

இந்த விலை 1951-ல் நிர்ணயிக்கப்பட்டது. 1956-லிருந்து இந்த விலையைக் கூட்டித்தருமாறு அரசாங்கத்திற்கும், இலங்கை புகையிலைக் கம்பெனியாருக்கும், கமக்காரரும், சங்கங்களும்செய்த பல முறைப்பாடுகளால் உரிய பலன் ஏற்படவில்லை.

சிகரெட் புகையிலையின் உற்பத்தி, உலர்த்தற் செலவுகள் இன்று அதிகரித்துள்ளன. ஒரு ஏக்கருக்கு ரூ. 769 1951-ல் ஏற்பட்டால், 1962-ல் ரூ. 1221 ஏற்படுகிறது.

ஆகவே சிகரெட் புகையிலை விலை தற்போதைய விலையில் 50% ஆவது கூட்டப்படவேண்டியுள்ளது.

கமக்காரரும், சங்கங்களும் செய்த கிளர்ச்சியின் பேருய் இன்று இருத்தலுக்கு 25 சதமே கூட்டப்பட்டுள்ளது. இந்த விலை வெறும் கண்துடைப்பாகும்.

உள்ளூர் சிகரெட் புகையிலையின் தீர்வை ரூபா 4/-லிருந்து தற்போது 24/-ஆகச் கூடிக் கொண்டே வந்துள்ளது. இதற்கேற்ப "சிகரெட்" விலையும் ஏறிக் கொண்டே வந்துள்ளது. ஆனலும் கமக்காரருக்கு கொடுக்கப்படுகின்ற சிகரெட் புகையிலை விலை மாத்திரம் 1951-லிருந்தபடியே தான் உள்ளது. ஆகையால் அரசாங்கம் உள்ளூர் புகையிலைக்குத் தீர்வையைக் குறைத்தாவது வேறு வழிகளைக் கையாண்டாவது விலையை 50% ஆவது கூட்டினல் ஏழை விவசாய மக்கள் வாழ வழி கிடைக்கும். இதனல் உள்ளூர் உற்பத்தி கூடும். வெளிநாட்டுக்குச் செல்கின்ற பல லட்சக்கணக்கான ரூபா மிச்சமாகும்.

### போறணைகள்

சிகரெட் புகையிலை உலர்த்தும் போறணைகட்கும், கட்டிடங்களுக்கும் கொடுக்கப்படும் கடன்கள் 10 வருடத் தவணையில் 10% அறவிடப்படுகிறது. ஆனல் போறணை 20 வருடங்களுக்கு மேலும் பாவிக்கலாமென்று அனுபவத்தில் காணக்கூடியதாயுள்ளது. ஆகவே 10 வருடத் தவணையை 20 வருடங்களுக்கு நீடித்து 5% அறவிடுதற்கேற்ற ஒழுங்குகள் செய்தல் நியாயமானது.

### உதவிகள்

விவசாயிகட்கு உரம், முட்கம்பி, பயிர் செய்கைக் கடன்களும், கடற்றெழிலாளர்க்கு இலவசமாகக் கொட்டில்கள், வீதியமைத்தற்கேற்ற கடன்களும் கொடுப்பதுபோன்று சிகரெட் புகையிலை உற்பத்தியாளர்கட்கும் இவைபோன்ற சில உதவிகளை மேற்படி சிகரெட் புகையிலை செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் செய்து கொடுத்தல்வேண்டும்.

சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சங்கங்கட்குப் புகையிலை உலர்த்துபவர் (கியுறர்) களின் சேவையை அரசாங்கம் 5 வருடம் மாத்திரம் கொடுக்கின்றது. இவர்கள் சேவை உற்பத்தியாளர்கட்குத் தொடர்ந்து கிடைத்தல்வேண்டும்.

1957 மார்கழியில் ஏற்பட்ட வெள்ளத்தால் கமக்காரர் தலை தூக்கமுடியாத பெருநட்டமடைந்தனர். உற்பத்தி, உலர்த்தற் செலவுகளுக்குத் தக்கபடி சிகரெட் புகையிலை விலை கூட்டப்படவில்லை. இவற்றால் பல கமக்கார அங்கத்தவர்கள் சிகரெட் புகையிலைச் செய்கையை முற்றாகக் கைவிட்டனர். இவ்வாறு செய்யாது கைவிட்ட அங்கத்தவர்களிடமிருந்து தற்போது விவசாய, கூட்டுறவு பகுதியார்கள் போறணைக் கட்டிடக் கடன்களில் அவர்கள் கட்டவேண்டிய பங்குத் தடவைக் கடன் பணங்களென்று கணக்கிட்டு ஒரு தொகையைச் சங்கங்களில் வைக்கின்றனர். இவ்வாறு வைத்துள்ள தொகையை அவர்கள் செய்யும் வேறு பயிர் வகைகளின் விற்பனையிலிருந்து சம்பந்தப்பட்ட சங்கங்கள்மூலம் அறவிடுதற்கான நடவடிக்கைகள் தற்போது துரிதமாக எடுக்கப்பட்டுவருகிறது. இவ்வாறு அறவிடத் துணிதல் அநீதமானது.

இக்கடன் அறவிடத் துணிவதால் அகப்பட்டவர்களே ஆக்கினைக்கஞ்சிச் செய்வர். வேறு புதியவர் யாவரும் சேர முன்வரார். தற்போது செய்யும் பழைய அங்கத்தவர்களும் செய்யப் பின்நிற்பார்கள்.

சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சங்கங்கட்கும் இக்கணக்கு வைக்கும் முறை பெரும் தலையிடியைக் கொடுக்கும்.

இவை முடியாத பட்சத்தில் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர்களின் கஷ்டங்களைக் குறைக்கும் நோக்கத்துடன், பிரதான செலவாக இருக்கும்போறணைக் கடன் தவணைப் பணத்தைச் சங்க அங்கத்தவர்கள் யாவரிடமும் ஒரே மாதிரி அறவிடும் முறையை விட்டொழித்தல் வேண்டும். ஒவ்வொரு வருடமும் உற்பத்தி செய்யும் அங்கத்தவர்களிடம் மாத்திரமே அவர்கள் உலர்த்திய புகையிலையின் விகிதாசாரப்படி கிருஷிகப்பகுதி உத்தியோகஸ்தரினதும், கூட்டுறவுப்பகுதி உத்தியோகஸ்தரினதும் சங்கங்களதும் ஆலோசனைப்படி உற்பத்தியாளர் கட்டக்கூடிய நியாயமான தொகையை அறவிட்டு வருவது அங்கத்தவர்களின் பொருளாதாரத்தைப் பாதிக்காதிருக்கும்.

இவற்றைக் கூட்டுறவுப் பகுதியாரும், விவசாயப்பகுதியாரும் கவனித்து ஏற்றன செய்தால் யாழ்ப்பாணக் கமக்காரரின் மோசமாக வீழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய பொருளாதாரத்தில் ஓரளவு கைதுக்கிவிட்ட நிலையுண்டாகும்.

## 10 எம். பி. க்கள் ரஷ்யா செல்வர்

கொழும்பு, திங்கள்

ரஷ்யா செல்லவிருக்கும் பார்லிமெண்டரி தூது கோஷ்டிக்கு சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொலா 10 எம். பி. க்களைத்தேர்த்தெடுத்துள்ளார்.

சபாநாயகரின் தலைமையில் ரஷ்யா செல்லும் பார்லிமெண்டரித் தூது கோஷ்டியில் கீழ் வரும் 10 எம். பி. க்களும் கலந்து கொள்வார்கள்.

திரு. இந்திரசேன டி. சொய்சா, திரு. ஷெல்டன் ரனரஜா, திரு. கே. எச். ஜி. அல்பேர்ட், திரு. யு. பி. ஐ. ஜின்னதாசா, திரு. டி. எம். குணசேகரா, (அரசாங்க கட்சியைச் சேர்ந்தவர்கள்.) திரு. எல்.பி. தசாநாயக்கா, திரு. வி. தர்மலிங்கம், திரு. நீல் டி. அல்விஸ, திரு. பேர்சி விக்ரமசிங்கா, திரு. ரூபேர்ட் குணவர்த்தன, (எதிர்க்கட்சி தரப்பைச் சேர்ந்தவர்கள்)

## 24ம் தேதி பாடசாலைகள் திறக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

இளம்பிள்ளைவாதநோய் காரணமாக கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் மூடப்பட்டிருந்த சகல பாடசாலைகளும் வருகிற 24 ம் தேதி மீண்டும் திறக்கப்படும். ஆனல் முஸ்லீம் பாடசாலைகள் இன்று முதல் திறக்கப்பட்டன.

## ஐயாறன் எழுதுவது

வருகிற 17-ம் திகதி நாட்டின் பல பகுதிகளிலும் தமிழரசுக்கட்சி பொதுக் கூட்டங்களை நடத்தப்போவதாகவும், காரியக்கமிட்டியின் கூட்டம் திருகோணமலையில் இம்மாதம் கடைசிவாரம் நடப்பதாயும், சென்ற சனிக்கிழமையன்றே 'ஈழநாடு' ஒரு செய்தியை வெளியிட்டதல்லவா? அதே செய்தியை நேற்று செவ்வாய்க் கிழமைதான் கொழும்பிலிருந்து வரும் ஒரு தினசரிப் பத்திரிகை, முன் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருப்பதாக கொழும்பிலிருந்து வந்த ஓர் அன்பர் என்னிடம் சொல்லி, 'ஈழநாடு' பல செய்திகளையும் முந்திக் கொடுப்பதென்ற பெயரை அதற்குள் எடுத்து விட்டதென்று பாராட்டினர்.

இதைக்கேட்க எனக்கு மிக மகிழ்ச்சியாகத்தானிருந்தது. ஆனல், தினசரி போராட்டம் தொடர்ந்து நடக்கிறது. வெகு கவனமாக இருந்து உழைத்தாலே, இந்த நற்பெயரைக் காப்பாற்றி நல்லதொண்டாற்றமுடியும்.

*

யாழ்ப்பாணத்தில் ஒரு தினசரிப்பத்திரிகையை நடாத்துவதென்பது முடியாதென்றும், இதற்கு முன் பலர் இதுபற்றி யோசித்தும், துணிந்தும் இதைச் செய்யமுற்படவில்லை என்றும், "தேவர்கள் நடந்துசெல்லத் தயங்கும் இடத்தில் முட்டாள்கள் ஓடக்கூடா" தென்றும் முன்னா ஓர் அன்பர் என்னிடம் எச்சரித்தார்.

"சத்தியாக்கிரகத்திலே முளைத்த காளான்" என்று மற்றோர் அன்பர் இப்பத்திரிகையை வர்ணித்தாராம்! சத்தியாக்கிரகம் சென்ற வருஷம் பெப்ரவரியில் ஆரம்பித்தது. ஆனல் "ஈழநாடு" ஆரம்பமாகி 3 வருடங்களுக்குமேலாகிறது. சத்தியாக்கிரகத்தை நம்பி இதை ஆரம்பிக்கவில்லை. சத்தியாக்கிரககாலத்தில் உடனுக்குடன் சுடச்சுடச் செய்திகளைக்கொடுத்த, தினம் 3 பதிப்புகளும் வெளியிட்டு. தொண்டுசெய்யும் சந்தர்ப்பம் 'ஈழநாடு'க்குக் கிடைத்தது. பொதுமக்கள் இதை அறிவர். விருப்பு வெறுப்பின்றி, ஒரு நிலை நின்று, மக்களுக்குப் பணி செய்து கிடப்பதே 'ஈழநாடு' பத்திரிகையின் நோக்கம். இதுவரை திருவருள் நமக்குத் துணைநின்று வருகின்றது. இனியும் துணைநிற்குமென்ற நம்பிக்கையுடனேயே நாம் தொண்டாற்றிவருகின்றோம்.

* * *

இப்பத்திரிகையை ஆரம்பித்த காலத்தில், எவ்வளவு எதிர்பார்த்தோமோ அதைவிட பன்மடங்காக பொதுமக்களின் ஆதரவு இருக்கின்றது. பொதுமக்களின் இந்த நல்லெண்ணமும் ஆதரவுமே நமக்குப் புது உற்சாகமும் எதிர்காலத்தில் நம்பிக்கையுமளிக்கின்றது.

* * *

ஞாயிறு "ஈழநாடு" பத்திரிகையில பேராசிரியர் சுந்தரலிங்கத்தார் எழுதிவரும் கடிதங்களை பலரும் ஆவலுடன் படிக்கிறார்களாம். சென்றவாரம் ஒலிவரைப்பற்றிஎழுதினர். வருகிற கிழமை "டி.எஸ்.சேனநாயக்காவின் மாபெரும் தவறுகள்"என்றுஎழுதுகின்ருர்.படிக்கத் தவருதீர்கள். பல அரசியல் ரகசியங்கள் எல்லாம் அம்பலமாகின்றன.

"சிந்திப்பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்த செந்தேன் முந்திப் பொழிவன, முத்திகொடுப்பன, மொய்த்திருண்டு பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன, பாம்பு சுற்றி அந்திப் பிறை அணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே."

— திருநாவுக்கரசு

# மேதின கொண்டாட்டங்களுக்கு அரசியல்கட்சிகள் ஒழுங்கு

கொழும்பு, திங்கள்

மே தினம் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை ஐந்து பிரதான அரசியல் கட்சிகளும் செய்துவருகின்றன. சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி, சமசமாஜக் கட்சி, எம். ஈ. பி., கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும் தனித் தனியே மே தினக் கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்குக் கமிட்டிகளை நியமித்துள்ளன. மே தினத்திலன்று கட்சிகள் நிறைவேற்றவிருக்கும் தீர்மானங்களை இந்தக் கமிட்டிகள் வரைந்துவருகின்றன.

சுதந்திரக் கட்சி சுதந்திர சதுக்கத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் மேதினம் கொண்டாடுகிறது. நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானங்கள் பிரதமருடன் கலந்தாலோசிக்கப்பட்டே வரையப்படுகின்றன.

ஐக்கியதேசியக்கட்சி கொம்பனித்தெரு ஹைட்பார்க்கில் மேதினம் கொண்டாடுகிறது.

இடதுசாரிக் கட்சிகள் கூட்டு முறையில் மே தினம் கொண்டாட எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

---

## உபகாரச் சம்பளம் ரத்தானது ஏன்?

கொழும்பு, செவ்வாய்

சுகாதார இலாகாவைச் சேர்ந்த ஒரு அதிகாரிக்கு கிடைத்த உலக சுகாதார ஸ்தாபன உபகாரச் சம்பளத்தை கொழும்பு மேயர் ரத்துச் செய்ததற்கான காரணங்களை கொட்டாஞ்சேனை மேற்கு அங்கத்தினர் திரு. அந்தனி மார்சாங் கேட்கவிருக்கிறார்

பிரதம சுகாதார வைத்திய அதிகாரியைக் கலந்தாலோசிக்காமல் ஏன் இவ்வாறு செய்யப்பட்டது என மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் அவர் மேயரை வினவுவார்.

# ஒரே தினத்தில் மூன்று உபதேர்தல்கள்?

## இரு வாரத்திற்குள் கெஸட் அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

மூதூர், வெலிமடை, அநுராதபுரம் ஆகிய மூன்று தொகுதிகளினதும் பார்லிமெண்ட் உப தேர்தல்கள், ஒரே நாளில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமான அறிவித்தலை, கவர்னர் ஜெனரல், இரண்டு வாரத்துக்குள் கெஸட் மூலம் அறிவிப்பார்.

கெஸட்டில் வெளியான ஒரு வார காலத்துக்குள் டிப்பாசிட் சலுகை குறித்து விண்ணப்பிக்க, அரசியல் கட்சிகள் எல்லாம் அனுமதிக்கப்படும்

சுயேச்சையாக எவரும் போட்டியிட முடிவு செய்யாவிடில், மூன்று தொகுதிகளிலும் மும்முரமான போட்டிகள் நடைபெறலாம் எனத் தெரிகிறது.

# பகுதி காரியாலயங்களில் இருக்கவேண்டிய பைல்கள்

## கல்வி இலாகா அறையில் குவிந்துகிடக்கின்றன

கொழும்பு, செவ்வாய்

பகுதிக் காரியாலயங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டிய ஆசிரியர்களின் 'பைல்கள்' கல்வி இலாகாவிலுள்ள தஸ்தாவேஜுகள் வைக்கும் அறையொன்றில் குவிந்து கிடக்கின்றன.

இதுபற்றி கல்வி இலாகாவைச் சேர்த்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில், இலாகா உடனடியாக நிலைமையை சீர்படுத்த நடவடிக்கை எடுக்குமென்றும், குவிந்து கிடக்கும் பைல்களை ஒழுங்குபடுத்தி பிரிவுக் காரியாலயங்களுக்கும், உப காரியாலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுமென்றும் கூறினர்.

பைல்களை ஒழுங்குபடுத்தி உரிய இடங்களுக்கு அனுப்புவதற்கு, போதிய ஊழியர்கள் இல்லை என்று பதிவுகாரர் முறையிட்டுள்ளார்.

---

## கல்விக் கமிஷனுக்கு திரு. அஸீஸ் மகஜர்

கொழும்பு, செவ்வாய்

தோட்டக் குழந்தைகள் விஷயத்தில் கல்விக் கமிஷன் பாரபட்சம் காட்டியிருக்கிறதென்றும், சகல குழந்தைகளுக்கும் சம கல்வி வசதி இருக்கவேண்டும் என்றும், தோட்டக் குழந்தைகளுக்குத் தாய் மொழியிலேயே போதிக்கப் படவேண்டும் என்றும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. அஸீஸ், கல்விக் கமிஷனுக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளார்.

## இளம் பெண் மரணம் பெற்றோருக்கு காவல்

தொடங்துவ, செவ்வாய்

தொடங்துவ, டெல்கஹடுவ என்ற இடத்தைச் சேர்ந்த 19 வயதுள்ள மாணவி கே. சீலாவதியின் திடீர் மரணம் குறித்து, ஹிக்கடுவ பொலிசார், இறந்தவரின் பெற்றோரைப் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

ஏப்ரல் 5-ந் திகதி சீலாவதிக்கு திடீரென சுகவீனம் காணப்பட்டதென்றும், பின்னர் சிறிது நேரத்தில் மரணமானரென்றும், அடுத்த நாள் அவரது சடலம் புதைக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

---

## அங்கம் குறைந்த ஓவியருக்கு உதவி

கொழும்பு, செவ்வாய்

அங்கம் குறைந்த சித்திரக்காரர் டபிள்யு. என். முனிசிறியின் சோகக் கதையை பத்திரிகையில் வாசித்த மத்திய வங்கி ஊழியர்கள் முனிசிறிக்கு உதவியளிக்க முன்வந்துள்ளனர்.

பட்டியல் ஒன்றை இவர்கள் தயார் செய்ததில் ரூ. 54 வசூலாகியிருக்கிறது. இந்தப் பணம், முனிசிறி வசம் இன்று ஒப்படைக்கப்படும்.

முனிசிறி ஒரு நொண்டி. அவர் உபயோகித்து வந்த மூன்று உருளை சைக்கிளின் டயர்கள் உடைந்து விட்டது என்றும், மீண்டும் தமது சைக்கிளை நல்ல நிலைக்குக் கொண்டுவர உதவியளிக்கும்படியும் தெரிவித்திருந்தார்.

## தையற்கலை...

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

யாளமிடும் நிறக்கட்டி. (மாக்கிங் சோக்) (3) அடையாளமிடும் சக்கரம். (மாக்கிங் சக்கரம்) (4) கத்திரிக் கோல். (5) ஊசி. (6) விரல் உறை. (7) (நூல் த்ரெட்) (8) படிமானப் பெட்டி.

**அங்குல நாடா:-** இதைக் கொண்டு உடைகளின் அளவுகளை அளக்கவேண்டும். அளவு நாடா இல்லாமல் ஒருவருக்கு அளவான உடை வெட்டித் தைப்பது எளிதல்ல.

**அடையாளமிடும் நிறக்கட்டி:-** உடைகளை அளவின்படி வரைந்து வெட்ட இது உபயோகப்படுகிறது. இதன் பக்கங்களை சீவிக் கூர்மையாக வைத்துக்கொள்ளவேண்டும் இதை லேசாகப் பிடித்தே அளவுக் கோடுகள் வரையவேண்டும். இது வளைவுக் கோடுகள் வரையவே மிகவும் பயன்படும்.

**அடையாளமிடும் சக்கரம்:-** இதுவும் உடைகளின் அளவுகளின்படி வரைந்து வெட்ட உபயோகமாகின்றது. இதனல் அடையாளம் செய்வது சுலபம் வளைவுகளை எளிதாக வரைந்து விடலாம். பல துணிகளை அடுக்கி ஒரே தடவையில் அவற்றின் மீது அடையாளம் செய்ய இது பயன்படும்.

**கத்திரிக் கோல்:-** வெட்டுபவரின் கைக்கு ஏற்றபடி ஒரு நல்ல கத்திரிக் கோல் வைத்துக்கொள்ளவேண்டும். விரும்பினல் ஒரு சிறிய கத்திரிக் கோலும் வைத்துக்கொள்ளலாம்.

**ஊசி:-** ஊசிகள் பல அளவுகளில், சிறியனவும் பெரியனவுமாக உள்ளன. 5, 6, 7, 8, முதலிய எண்கள் ஊசிகளே மிகுதியாகப் பயன்படுகின்றன. தைக்கும் துணியின் தடிப்புக்கு ஏற்ப ஊசியைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

**விரல் உறை:-** இது கைத்தையல் செய்வதற்கு மிகவும் உபயோகமாகும். இதை நடுவிரலின் நுனியில் அணிந்து கொள்வதால் ஊசியை அழுத்தித் தள்ளுவதற்குப் பயன்படுகிறது.

**நூல்:-** எல்லா நிறங்களிலும் கால் சட்டைகளை வாங்கி 'ஸ்டாக்கில்' வைத்திருப்பது நன்று. கனமான துணிக்குச் சற்று அழுத்தமான நூலையே உபயோகிக்கவேண்டும்.

இவைகளை விட நாம் இன்னும் சில குறிப்புகளை மனதில் வைத்திருக்கவேண்டியது அத்தியாவசியமானது.

நாம் ஒரு துணியை எவ்வளவோ விலை கொடுத்து வாங்குகிறோம் அல்லவா? அறியாமை காரணமாகச் சில சமயங்களில் நாம் துணிகளை வீணாக்கி விடவும் கூடும் துணியை வாங்கியவுடன் அத்துணி சுருங்குமா? சுருங்காதா? என்பதை அறிந்து, சுருங்குவதாய் இருந்தால் அதை 8 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து காய்ந்த பின் ஸ்திரிக்கை பிடிக்கவேண்டும் அதன் பின் வெட்டித் தைக்கலாம். துணி அளவெடுக்கும்பொழுது கவனிக்கவேண்டியன சில:-

உடை அளவு எடுக்கும் போது சில சமயங்களில் மார்பைவிட இடுப்பளவு பெரிதாகவும், தோள் அளவும் கழுத்தளவும் ஒன்றுக்கொன்று பெருத்தும் சிறுத்தும் இருக்க வேண்டிய அளவிற்கு மாருகக் காணப்படலாம். அவைகளை நன்ருகக் கவனத்திற் கொள்வதுடனும் குறித்தும் வைத்துக் கொண்டு அவைகட்கேற்ப சிந்தித்து உடை தயாரிக்கவேண்டும்.

அளவு வேறுபடுவதற்கேற்ப அதிக அளவு வேண்டிய இடங்களில் அதிகம் வைத்தும், குறைக்கவேண்டிய இடங்களில் குறைத்தும் உடல் அமைப்பிற்கு ஏற்ப தயாரிக்கும் உடைகளை அணிபவரின் உடல் வளைவு நெளிவுகளுக்குப் பொருத்தமாகவும் அழகாகவும் அமைக்கவேண்டும்.

மீனம்பாள். கே·

# ஜப்பானிய குடும்ப கட்டுப்பாடு நிபுணர்கள்

## இலங்கையில் பிரசாரம் செய்ய வந்துள்ளனர்

கொழும்பு, செவ்வாய்

ஜப்பானைச் சேர்ந்த குடும்பக் கட்டுப்பாடு நிபுணர்கள் இருவர் தற்போது இலங்கை வந்துள்ளனர். தங்களது நாட்டுக் குடும்பக் கட்டுப்பாடு மாத்திரைகளை இங்கு பரப்பும் நோக்கத்துடனே அவர்கள் இலங்கை வந்துள்ளனர்.

இலங்கை குடும்பக் கட்டுப்பாடு சங்கத்தினல் அறிமுகப்படுத்தப்பட்ட குடும்பக்கட்டுப்பாடு மாத்திரைகளிலும் பார்க்க தங்களது நாட்டு மாத்திரைகள் அதிக பயனைக் கொடுக்கக் கூடியதென்று அவர்கள் தெரிவித்துள்ளனர்

ஜப்பானைச் சேர்ந்த திரு. டகாஷி ஒசாவா, திரு. அகிரா அகை ஆகிய இவ்விரு நிபுணர்களும், பல் கிராமங்களுக்கும் சென்று தங்களது நாட்டு குடும்பக் கட்டுப்பாடு மாத்திரைகள். பற்றி எடுத்துக்கூறுவார்கள் இவர்களின் கூற்றுப்படி, இம்மாத்திரைகள் வலிமை கூடியதென்றும், விலை குறைவானதென்றும் தெரியவருகிறது.

---

## 'பாடசாலையை பொறுப்பேற்கவும்'

### பெ. ஆ. சங்கம் வேண்டுகோள்

ஓமந்தை, செவ்வாய்

ஓமந்தையிலுள்ள வேடமகிழங்குள ஆரம்ப தமிழ்க்கலவன் பாடசாலை பெற்ரோர் ஆசிரிய சங்கக் கூட்டம் தலைமை ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கிராமமுன்னேற்றச் சங்கத்தால் நடைபெற்றுவரும் இப்பாடசாலையை, கூடிய கெதியில் அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு ஆவன செய்யுமாறு கல்வி மந்திரிக்கும், இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மகஜர் அனுப்பப்பட்டுள்ளதுடன் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரத்தையும் இப்பாடசாலையைக் கூடிய கெதியில் அரசாங்கம் எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு சங்கம் வேண்டுகிறது.

---

## காவலில் இருப்பவர்களுக்கு கடிதங்கள்

கொழும்பு, செவ்வாய்

சதி சம்பந்தமாக தற்போது காவலில் இருப்பவர்களுக்கு வரும் கடிதங்களும் மற்றும் பார்ஸல்களும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவரிடமோ ஒப்படைக்கப்பட்டு பின்னர் உரியவர்களுக்கு வழங்கப்படும். இக்கடிதங்களும் பார்ஸல்களும் போக்குவரத்து தபால் மந்திரி திரு. பி. ஜி. பி. கலுகல்லாவின் உத்தரவிடும் முறையிலேயே கொடுக்கப்படும்.

---

## சமயற்பகுதி

(6ம் பக்கத் தொடர்ச்சி

ளாக விரும்பிய வடிவத்தில் வெட்டவும். முட்டையை அவித்துக் கோதை நீக்கி சிறு துண்டுகளாகப் பொடி பண்ணவேண்டும். சீஸ்சையும் சிறு துண்டுகளாக பொடி செய்யவேண்டும். பொடிசெய்த சீஸ்சையும் முட்டையையும் மிளகு தூளோடும் உப்போடும் நனகு கலக்கவேண்டும். வெட்டிய பாணுக்குப் பட்டரைப் பூசி அதன்மேல் முட்டைக் கலவையையும் தடவி, இன்னெரு பட்டர் பூசிய பாண் துண்டினல் மூடி வைக்கவும். பின்னர் பரிமாறலாம்.

செல்வி. வைத்தியலிங்கம்

# உலகவலம்

### ரயில்வே வாரம்

9-வது ரயில்வே வாரம் நேற்று முதல் இந்தியாவெங்கும் கொண்டாடப்பட்டது.

### பங்களூர் துறைமுகம்

தூத்துக்குடியைப் போல் பங்களூர் துறைமுகத்தையும் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கத் தயாராய் இருப்பதாக மைசூர் முதன் மந்திரி அறிவித்தார்.

### ஜப்பான் ஆட்சேபம்

அமெரிக்கா அணுசோதனை நடத்தவிருப்பதை, ஜப்பான் கடுமையாக ஆட்சேபித்திருக்கிறது. உத்தேச அணு சோதனையினல்ஏற்படும்விளைவுக்கு நஷ்டஈடுகோர உரிமை உண்டு என ஜப்பான் அறிவித்துள்ளது.

### 77 பேர் கைது

மேற்கு இரியனில் 45 இந்தோனேஷியர்கள் சிறைப்பிடிக்கப் பட்டார்கள் என்றும், ஒரு வாரத்திற்கு முன் 32 இந்தோனேஷியர் சிறைப்பிடிக்கப்பட்டார்கள் என்றும் டச்சு அறிவிப்பு கூறுகிறது.

### நீளமான ஓடுபாதை

டில்லி பாலம் விமான நிலையத்தில் 10,500 அடி நீளமான ஓடு பாதை ஒன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளது. 132 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இப் பாதை கிழக்கிலேயே மிக நீளமான விமானத்துறை ஓடுபாதைகளில் ஒன்ருகும்.

### பட்ஜட்

பிரிட்டிஷ் நிதிமந்திரி திரு. செல்வின் லாய்ட் நேற்று தமது புதிய பட்ஜட்டை காமன்ஸ் சபையில் சமர்ப்பித்தார்.

### ஜமாய்க்கா

ஜமாய்க்காவில் பொதுத் தேர்தல் நேற்று ஆரம்பமாகியது.

### இக்கட்டான நிலை

இந்தியப் பிரதிநிதி திரு. ஜா தலைமையிலுள்ள 6 பேரடங்கிய ஐ. நா. கோஷ்டிக்கும், 4 பிரிட்டிஷ் மந்திரிக்குமிடையே தென்ரொடீஷியா சுதந்திரம் பற்றி நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் இக்கட்டான நிலைமை ஏற்படும் எனத் தெரிகிறது.

### மோதல்

ஜெனிவா மகாநாட்டில் நேற்று ரஷ்யாவும், மேற்கு நாடுகளும் இரு தடவை மோதிக்கொண்டன.

---

## கனடாவிலிருந்து தடுப்பு மருந்து இன்னும் வரவில்லை

பொரளை, திங்கள்

கனடாவிலிருந்து இங்கு இறக்குமதியாகும் என எதிர்பார்க்கப்பட்ட இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு மருந்து இன்னும் வந்து சேரவில்லை. இன்றைய தினம் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட மருந்து அடுத்த இரு வாரங்களில் தான் வந்து சேரும். தடுப்பு மருந்து இப்போதுதான் தயார்செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது.



# மங்கையர் உலகம்

## கிராமப் பெண்கள் நலன் பாதுகாக்கும் இந்திய கிராம சேவகிகள்

'அரசியல் புரட்சிகள், பொருளாதார புரட்சிகள் பற்றிப் பேசிக்கொள்கிறோம். நாட்டிலுள்ள பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றக் கூடிய புரட்சி தான் பெரும் புரட்சியாகவிருக்க முடியும். ஒரு நாட்டின் தரத்தை அந்த நாட்டுப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தின் மூலம் தான் இலகுவாக அறிந்துகொள்ளலாம்.' — ஜவஹர்லால் நேரு

பெண்கள் அன்பு, தியாகம், தூய்மை ஆகியவற்றின் சின்னமாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளார்கள். கலாச்சாரத்தைப் பாதுகாப்பவர்கள் பெண்களே என மகாத்மா காந்தி கூறியுள்ளார். உலகத்தில் ஏற்படும் பலவித மாறுதல்களும் மக்களின் பண்பாட்டை மாற்றிவிடக் கூடியதாகவிருந்தபோதும், ஒவ்வொரு நாட்டின் தனிப்பட்ட பண்பாட்டையும் பாதுகாத்து வருபவர்கள் பெண்களே. 'நாள் புலர்ந்து மாலையாகிவிட்டால் ஆண்களின் உழைப்பு முடிந்துவிடுகிறது. ஆனால் பெண்களின் உழைப்பு எப்பொழுதுமே முடிந்துவிடுவதில்லை' இது ஒரு பழமொழி. உணவு சமைப்பது பரிமாறுவது, தையல் தைப்பது, ஆடை துவைப்பது, பிள்ளை வளர்ப்பது, நோயாளர் பரிகரிப்பது, இனபந்துக்களுடன் கொண்டாடுவது, விருந்துகள் வைப்பது என்று எத்தனையோ வேலைகளில் பெண்கள் இரவு பகலாக ஈடுபடுவார்கள்.

தாயாகவும், வீட்டுப்பெண்ணாகவும் கடமையாற்றும் பெண்ணுக்கு எந்த நேரமுமே உழைப்புநேரம் தான். கிராமப் பகுதிகளிலுள்ள பெண்கள் தமது வயற் பண்ணைகளிலும் குடிசைக் கைத்தொழில்களிலும் ஈடுபட்டு வீட்டுக்கு வருவாய் தேடவேண்டியவர்களாயும் இருப்பார்கள். கோழிகள், மாடுகளை வீடுகளில் வைத்தும் வளர்ப்பார்கள். இப்பேற்பட்ட பெண்களுக்குச் சிறிதுமே ஓய்வு நேரம்கிடைப்பதில்லை. ஓயாத வேலையினால் இவர்கள் நோய் வாய்ப்பட்டுவிட்டு வேலைகளைச் செய்ய முடியாமல் அவஸ்தைப் படுவதுண்டு.

இவ்வாறு அவஸ்தைப்படும் இந்திய கிராமப் பெண்களுக்கு சமூகசேவையிலீடுபட்டு உழைக்கும் ஒரு சில இந்திய பெண்கள் வரோசனமளித்து வருகிறார்கள் இந்தப் பெண்கள் தம்மால் இயன்றசரீர உதவிபுரிவதோடு கிராமப் பெண்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு மன ஆறுதல்கள் கூறியும் வருகிறார்கள். கிராம மக்களின் அறியாமையை அகற்றும் அறிவுரை புகட்டுபவர்களாகவும் இவர்கள் கடமை புரிகிறார்கள். 'கிராம சேவகி'கள் என அழைக்கப்படும் இந்தப்பெண்கள் தமக்குப் பிரியமான கடமையை ஆற்றுவதற்கு இந்திய அரசாங்கமும் உதவுகிறது. சமூக சேவையில் ஈடுபட விரும்பும் பெண்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பல்லவா!

இந்திய அரசாங்கத்தின் பெண்கள் நலன் பாதுகாப்பு சமூகஅபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கிராமசேவகிகள் தெரிவுசெய்யப்பட்டு பயிர்சியளிக்கப்படுகிறார்கள். பயிற்சி முடிந்ததும் கிராமங்களுக்குச் சென்று இந்தப்பெண்கள் உத்தியோகபூர்வமுறையில் சேவையாற்றுகிறார்கள்.

18—35 வயதுக்குட்பட்ட பெண்களே இந்தத் தொழிலுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். மணமான பெண்களே இந்தவேலைக்கு அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர் இந்தியாவின் பல பிரதேசங்களிலும் மொத்தமாக 43 கிராமசேவக பயிற்சி நிலையங்கள் இருந்து வருகின்றன. ஒவ்வொரு நிலையத்திலும் வருடமொன்றுக்கு 40 பெண்கள் பயிற்சிபெறுவர். இதுவரை 4,000 பெண்கள் இப்பயிற்சி பெற்றுள்ளார்கள். 2,000 பேர் இப்போது பயிற்சி பெறுகிறார்கள்.

தான் நல்லாக வாழ்ந்து ஏனையோருக்கு ஒரு எடுத்துக் காட்டாகவிளங்குவதே 'கிராம சேவகி' ஒருவரின் முதல் சேவை. இவரின் வீட்டுப்பராமரிப்பு முறைகளை ஏனைய கிராமப்பெண்களும் பார்த்துப் பழகிக்கொள்ளக்கூடிய வகையில் இவர் வாழ்ந்து காட்டவேண்டியவராகிறார்.

(7ம் பக்கம் பார்க்க)

### பெண் சக்தி

"இல்லங்களாக, கோவில்களாக, மடங்களாக, வைத்தியசாலைகளாக, வித்தியாசாலைகளாக இன்னும் இவைபோன்ற இன்றியமையாத இடங்கள் தோறும் பூசனைபுரிதல்போன்று அகமும் புறமும் ஒரேயடியாகப் பயபக்தி விஸ்வாசத்துடன் கடமைபுரிகின்றவர்கள் பெண் தெய்வங்களே. இவ்வுலகமாகிய தொழிற்சாலையானது இயங்கப்பெறுவதும், இப்பெண் சக்தியினால்தான்."

தாய்ப்பால் வங்கி

## தென் ஆபிரிக்க குழந்தைகளுக்கு ஒரு சிறந்த வாய்ப்பு

ஜோஹான்ஸ்பேர்க் நகரத்திலுள்ள தாய்மார்கள் ஒரு அபூர்வமான ஸ்தாபனத்தை ஆரம்பித்துவைத்துள்ளார்கள். அதுதான் தாய்ப்பால் இன்றித் தவிக்கும் குழந்தைகளுக்குத் பால் வழங்கும் ஸ்தாபனம்.

ஆஸ்பத்திரிகளில் இணைக்கப்பட்டுள்ள இரத்த வங்கிகள், கண்தான வங்கிகள் போலத் தாய்ப்பால் வங்கி ஒன்றை ஏற்படுத்துவதற்கு இங்குள்ள தாய்மார்கள் உதவி புரிந்துவருகிறார்கள். இந்த தாய்மார்களின் வேண்டுகோளின் பெயரால் தென ஆபிரிக்க வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனம் தாய்ப்பால் வங்கி ஒன்றை நடாத்திவருகிறது. தகரப்பால், புட்டிப்பால்கள் ஒத்துக்கொள்ளாது, தாய்ப்பாலின்றித் தவிக்கும் ஆபிரிக்க குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வங்கி பால் வழங்கி வருகிறதாம்.

இந்த வங்கியின் ஒரு அற்புதமான பயன் என்னவெனில் குழந்தைகளின் தேக சௌக்கியத்துக்கேற்ற பாலைக் குழந்தைகள் பெற்றுவிடலாம். அத்தோடு இந்தப் பால், விஞ்ஞான சாதனங்களைக்கொண்டு சுத்திகரிக்கப் படுவதால் எது

(7 ம் பக்கம் பார்க்க)

## தையற்கலை பயில்வோர் கவனிப்புக்கு....

யாரே அழகுக்கு அழகு செய்வார்? எனில் அழகுக்கு அழகு செய்வார் தையற்காரர்! என்று நாகரிக உலகம் விரைந்து விடை கூறிவிடுகிறது. அழகுடையோரை மேலும் அழகுபடுத்திக் காட்டுவது மட்டுமல்ல, அழகற்றோரையும் அழகுடையவராகக் காட்சி அழிக்கும்படி செய்யும் வல்லமை தையற்காரரிடத்தே விளங்கக் காணலாம்.

மக்களின் நாகரிக மேம்பாட்டினை உணர்த்துவதில் உடை பெரும் பங்கு பெறுகிறது. ஒருவரைக் கண்டமாத்திரத்தே அவரை மதிப்பிடுவதற்கு முதல் அளவு கருவியாய் விளங்கிவருவது அவர் அணிந்திருக்கும உடுப்புகளின் தோற்றமேயாகும்.

தையற் கலை, தையல் தொழில் புரிவோருக்கு மட்டுமல்லாது ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் கற்றுக்கொள்ள வேண்டிய இன்றியமையாத நிலையில் இற்றைக் காலம் வளர்ந்துவருகிறது. படிப்பறிவு வளர்ந்துவரும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களெல்லாம் இக்கலையை பெரிதும் விரும்புகிறார்கள் என்பது வரவேற்கத் தககதில் ஒன்றாகும்.

சட்டைகளைத் தைக்குமுன் பொதுவாக அறிந்திருக்க வேண்டிய சில முக்கிய விஷயங்களை இங்கு தருகிறேன். தையற் கலையில் ஈடுபடுபவர்கள் கீழ் வருவனவற்றை அறிந்து இருத்தல் நலம். தையல் தைக்க முன் அதற்கேற்ற பொருட்களை சேகரித்துக்கொள்ளவேண்டும். அவையாவன:-

(1) அங்குல நாடா. (2) அடை

(5ம்பக்கம் பார்க்க)

## சமையற்பகுதி

### பட்டர்கேக் (ButterCake)

தேவையான பொருட்கள்

அரை ரு. பட்டர்
அரைக்கால் ரு. பிளம்ஸ்
6 முட்டைகள்
கால் ரு சீனி
கால் ரு. மா
2 தேகரண்டி வனிலா நிறம்.

செய்யும் முறை:

ஒரு பாத்திரத்தில் முட்டையை ஊற்றி நன்றாகக் கலக்க வேண்டும். வேறோர் பாத்திரத்தில் பட்டரையும் சீனியையும் போட்டு அடித்துக்கலக்க வேண்டும். முட்டைக் கலவைக்குள் மாவையும், பட்டரையும் சீனியையும் கலந்த கலவையையும் ஊற்றி ஒன்றாகச் சேர்த்துக் கலக்கவும். பின் பிளம்ஸ்சையும் வனிலாவையும் நிறத்தையும் போட்டு ஒரு தட்டில் ஒயில் பேப்பரை (oil paper) விரித்து, அதில் பட்டரைப் பூசிய பின் அதற்குள் கலவையை ஊற்றி ஓவனில் (oven) வைத்துப் பதத்திற்கு வெந்தபின் இறக்கி ஆறியபின்னர் வெட்டிப் பரிமாறலாம்.

### முட்டை சான்விச்சஸ்

2 ரு. பாண்
முக்கால் ருத்தல் பட்டர்
4 முட்டை
அரைக்கால் ரு. சீஸ்
மிளகு தூள் அளவுக்கு
உப்பு அளவுக்கு

செய்யும் முறை:

பாணை மெல்லிய துண்டுக

(5ம் பக்கம் பார்க்க)




# காங்கேசன்துறையில் நவீன தபாற்கந்தோர்

## இவ்வருடம்வேலைகள் ஆரம்பிக்கும்

காங்கேசன் துறை, செவ்.

காங்கேசன் துறையில் இவ்வருடத்தின்பிற்பகுதியில் புதிய தபாற் கந்தோர் கட்டிடம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. நவீனமுறையில் இக் கட்டிடம் அமைக்கப்படவிருப்பதுடன், தற்போதைய தபாற்கந்தோர் காங்கேசன் துறை - கீரிமலை வீதியில் இடமாற்றஞ் செய்யப்படும்.

இதுசம்பந்தமாகப் போக்குவரத்து தொழில், தபாற்பகுதி நிரந்தரக் காரியதரிசி திரு.எம். இராஜேந்திரா, காங்கேசன் துறைத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் காங்கேசன் துறை தபாற்கந்தோர் கமிட்டியிடம் தபாற்பகுதியின் மூன்ளுண்டுகாலத்திட்டஅமைப்பின் கீழ் இரண்டாவது வருடத்தில் முதல்வேலையாக நிறுவப்படும். எனினும் இரண்டாவது ஆண்டு வேலைகள் இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகும். காங்கேசன்துறை தபாற் கந்தோர் கட்டிடத்தை உடனடியாக ஆரம்பிக்கப் போதியநிதி இல்லாமல் உள்ளது. எனவே இரண்டாவது வருடத் திட்டத்தில் தபாற்கந்தோர் கட்டிடம் அமைக்கப்படுமென்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

காங்கேசன் துறையில் தபாற்கந்தோர் அமைப்பதற்கான காணி, அரசினரால் வாங்கப்பட்டுள்ளது. புதிய தபாற் கந்தோர் நிறுவுவதற்குச் சுமார் இரண்டுலட்சம்ரூபாவரை செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

---

## புத்தாண்டு சைக்கிள் போட்டி

பருத்தித்துறை, செவ்வாய்

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியினரால் புத்தாண்டு விழாவையொட்டி ஏற்பாடு செய்த 50மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெற்றது.

38 வீரர்கள் கலந்துகொண்ட இப்போட்டி ஓட்டம், கொடிகாமம் ரோட்டில் 1 மைலிலிருந்து அதிகாலை 6-32 மணிக்குஆரம்பமானது.

முடிவிடமான பொலிஸ் நிலையத்தை 1வது வீரரான இ இராமநாதன் 8மணி48நிமிடத்தில் வந்தடைந்தார். முறையே 2,8,14,16 நிமிட வேளையில் 2ம், 3ம், 4ம், 5ம் வீரர்கள் வந்தடைந்தனர்.

இவர்களில் 4ம் வீரரைத் தவிர்ந்த ஏனைய நால்வரும் புலோலியைச் சேர்ந்தவர்கள்.

வீரர்கள்:- 1.இ. இராமநாதன், 2. ப. வீரபத்திரமகாதேவா, 3. கே. சிவலிங்கம், 4. வி. நடராசா, 5. எம். இராசு.

மொத்தம் 38பேரில் 25பேரே ஓட்டத்தை முடித்தனர்.

வீரர்கட்கு புத்தாண்டுவிழாக் கொண்டாட்டத்தின்போது பரிசில்கள் வழங்கபபடும்.

---

## கைப்பந்தாட்டம்

காங்கேசன் துறை,செவ்வாய்

காங்கேசன் துறை ஸ்புட்னிக் விளையாட்டுக் கழக'பி' பிரிவுக் கோஷ்டியும், கலட்டி காந்திஜி விளையாட்டுக்கழக (பி) பிரிவுக் கோஷ்டியும் கலந்துகொண்ட கைப்பந்தாட்டப் போட்டியில் ஸ்புட்னிக்கோஷ்டி 15-5,15-2 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

---

## கலிகை கந்தசாமிகோவில் அலங்காரத் திருவிழா

பருத்தித்துறை, செவ்வாய்

துன்னாலைகலிகை கந்தசுவாமி கோவில் அலங்காரத் திருவிழா செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. இந்த அலங்காரத் திருவிழா தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும்.

---

## கிராமப் பெண்கள்..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கிராம மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து பின்னர் கிராமவாழ்க்கையில் படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்துவது இவர்களின் கடமையாகும். கிராமப் பெண்கள் தம் வருவாய்க்கும் தேவைகளுக்குமேற்ப வாழும் முறைகளை கிராமசேவகிகள் அவர்களுக்கு எடுத்துரைப்பார்கள். சிறு வீடுகளாயினும் அவற்றை அழகுசெய்யும் முறைகளையும், வசதியான முறையில் அமைக்கும் வகையினையும்காட்டிக்கொடுப்பார்கள். கர்ப்பமுற்றிருக்கும் பெண்களைப் பராமரிக்கும் முறையையும் சுகாதார முறையில் அவர்கள் பொழுது போக்குவதையும் சொல்லிக் கொடுப்பார்கள். வீட்டுவிவகாரங்கள் சகலவற்றிலும் புத்தி கூறுவார்கள். எல்லாவற்றிலும் முக்கியமாக பெண்கள் தத்தம் மதங்களைப் போற்றி அவற்றுக்கேற்ப ஒழுகிவரப்பண்ணுவதில் கிராமசேவகிகள் பெரிதும் ஊக்கமெடுப்பர்.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் செயற்பட்டுவரும் இந்த கிராமப் பெண்கள் நலன் பாதுகாப்பு இயக்கம் இந்திய கிராமப் பெண்களுக்குப் பெரிதும் உதவிவருகிறது. சமூக சேவையில் ஈடுபட்டு உழைக்க விரும்பும் பெண்களுககு அரிய வாய்ப்பும் கிடைப்பதோடு கிராமப்பெண்கள் நமக்குத் தெரியாத பலவற்றை அறிந்துகொள்ளவும் முடிகிறது. இத்தகைய இயக்கங்களை எமது நாட்டிலும் ஆரம்பித்தல் நல்லதல்லவா?

---

## தென் ஆபிரிக்கா...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வித கிருமிகளோ தொற்று வியாதிகளோ குழந்தைகளின் தேகத்தில் கலந்து விடமாட்டாது.

தாய்மாரிலிருந்து பால் பெறப்பட்டு உடனடியாகவே சுத்திகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப படுகிறதாம். தென் ஆபிரிக்க இரத்த வங்கிப் பகுதித் தலைமை அதிகாரி டாக்டர் ஏ. செனட்டென்டைக் என்பவரே தாய்ப்பால் வங்கிக்கும் தலைமை ஏற்றுள்ளார். இந்த ஸ்தாபனம் மிக்க உபயோகமான முயற்சியொன்ருகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

புதன் 11-4-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 பத்மாவதி பூர்ணனந்தா, என். பாலசுப்பிரமணியம்—வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விவாத மேடை, 9-45 குரல் வகை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 திருப்பனந்தாள் ஆர். ஷண்முகசுந்தரம்—வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 குடத்தை என். ஆர். ஸ்ரீநிவாசன்—

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 குறைவற்ற செல்வம்—சித்திரம், 7-45 'மலைவிளக்கு'—நாடகம், 8-00 திருப்பனந்தாள் ஆர். ஷண்முகசுந்தரம்—வீணை. 8-30 திரைப்பட இசை, 9-15 நல்லுரை, 9-20 லயவின்யாசம், 9-50 இசைமாலை.

---

## கண்டக்டரை தாக்கினர்

ஹொறணை, செவ்வாய்

புறக்கோட்டையிலிருந்து ஹொறணைக்குச் சென்ற ஒரு பஸ்ஸில், ஒரு பிரயாணி கண்டக்டரைத் தாக்கியதால் அவருக்குத தலையில் காயம் ஏற்பட்டது. பஸ் நிறைந்திருந்ததால் பிரயாணிகளை ஏற்ற இக் கண்டக்டர் மறுத்தாரென்றும், இதனால இத் தாக்குதல் நடைபெற்றதென்றும் கூறப்படுகிறது. தாக்கிய நபர் கம்பிநீட்ட முயன்றார். ஆனால் இதர பிரயாணிகள் அவரைப்பிடித்து பஸ்ஸிலேயே கொகுவலை பொலிசுக்கு இட்டுச் சென்றனர்.



# 1959-ம் ஆண்டு ஏற்பட்ட கூட்டு உடன்படிக்கை

## மீண்டும் ஆராய தொழிற்சங்கம் கோரிக்கை

கொழும்பு, திங்கள்

இலங்கை தொழிற்சங்க சம்மேளனமும் முதலாளிமார் சம்மேளனமும் 1959 ல் செய்து கொண்ட கூட்டு உடன்படிக்கையைத் திருப்பி ஆராயத் தொழிற்சங்கசம்மேளனம் உத்தேசித்துள்ளது. இந்தக் கூட்டு உடன்படிக்கையைத் திருப்பி ஆராய வேண்டுமென தொழிற்சங்க சம்மேளனம் முதலாளிமார் சம்மேளனத்துக்கு அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

இரு சம்மேளனங்களும் செய்துகொண்ட உடன்படிக்கை, ரப்பர், தேயிலை, தென்னைத் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களுக்கும் சம்பந்தப்பட்டது.

அரசாங்க சம்பளக் கமிஷனின் சிபார்சுகளின் அடிப்படையில் உடன்படிக்கையை ஆராய்ந்து திருத்தி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

மக்கோனு, செவ்வாய்

மொறகொல்ல சந்தியில் மோட்டார்கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில் ஏழு பேர் காயமுற்றனர். காயமடைந்தோர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மேல்சபைக்கு அன்பழகன் தெரிவு

சென்னை, ஏப். 10

தமிழ்நாடு சட்டசபை மேல் சபைக்கு திராவிடமுன்னேற்ற கழகப் பிரமுகர் திரு. கே.அன்பழகன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சென்னை- செங்கல்பட்டு பள்ளி ஆசிரியர் தொகுதியிலிருந்து திரு. அன்பழகன் தெரிவு செய்யப்பட்டார்.

---

வாதநோய்

## மாத்தறையில் ஒருவர் மரணம்

மாத்தறை, செவ்வாய்

இளம்பிள்ளை வாதநோயினால், ஒருவர் மாத்தறை ஆஸ்பத்திரியில் மரணமானார். மற்றுமொருவரின் நிலைமை மோசமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இளம்பிள்ளைவாதநோயினால் பீடிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மற்றும் மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## புதுவருட விளையாட்டுப் போட்டிகள்

ஓமந்தை, செவ்வாய்

தமிழ், சிங்களப் புதுவருடத்தை முன்னிட்டு வருகிற 14-ந் திகதி வவனியா பட்டினசபை விளையாட்டு மைதானத்தில் பல விளையாட்டுப் போட்டிகளை நடத்த வவனியா ஐக்கிய விளையாட்டுக் கழகம் முன்வந்துள்ளது.

விசேஷமாக 30 மைல் ஆண்கள் சைக்கிள் ஓட்டப் பந்தயமும் ஒரு மைல் கால் ஓட்டப் பந்தயமும், பெண்கள் சைக்கிள் ஓட்டப் பந்தயமும், சறுக்கு மரம் ஏறுதலும், மற்றும் 25 போட்டிகள் இடம் பெறுகின்றன.

பெண்கள் சைக்கிள் ஓட்டப் பந்தயம் நடைபெறுவது வவனியா மாவட்டத்தில் இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பண்டிதமணிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்வாய்

"தமிழ்ப்புலமையும்சைவசமய அறிவும் மிக்கவராய் விளங்கிக் கொண்டிருப்பவர் பண்டிதமணி, வித்துவான் ந. சுப்பையபிள்ளை.அன்னரது சேவைக்கு ஊக்கமளித்துக் கௌரவிக்க வேண்டியது தமிழ் மக்களது கடமையாகும்."

இவ்வாறு வண்ணைநாவலர் வித்தியாசாலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பண்டிதமணி, வித்துவான் ந. சுப்பையபிள்ளையின் பாராட்டு விழாச் சபைக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. வ. இளையதம்பி குறிப்பிட்டார்.

தக்க நிதி சேர்த்துப் பொற்கிழிவழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பஸ் கட்டண சபை நியமனம்

### பி. ஒ. பெர்னண்டோ தலைவர்

கொழும்பு, செவ்வாய்

பஸ் கட்டண சபைத் தலைவராக திரு. பி. ஒ. பெர்னண்டோவையும் சபை அங்கத்தவர்களாக திரு. கே. சச்சிதானந்தாவையும் திரு. பி. டி. அப்பயாலாவையும் தொழில் தேசிய மயமந்திரி திரு. எம். பி. டி. சற். சிறிவர்த்தன நியமித்துள்ளார்.

---

## நுவரெலியாவில் பிரதமர் சிறிமா

கொழும்பு, செவ்வாய்

பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா நேற்று நுவரெலியாவுக்குப் பிரயாணமானார். சில தினங்கள் ஓய்வெடுக்கச் சென்றுள்ள பிரதமர் இம்மாதம் 17ந் திகதி வரும் அவரது பிறந்த தினத்தை அங்கேயே கழிப்பார். பிரதமருடன் அவரது பிள்ளைகளும் சென்றுள்ளனர்.

---

## லொறி புரண்டு ஒருவர் மரணம்

### இருவர் காயம்

கினிகதென, செவ்வாய்

கினிகதெனைக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள கடவல என்னுமிடத்தில் மணல் ஏற்றிச் சென்ற ஒரு லொறி பள்ளத்தாக்கு ஒன்றில் விழுந்ததால் சாம். ஜேசுதாசன் என்பவர் ஸ்தலத்திலேயே மாண்டார். லொறிச் சாரதியும் கிளீனரும் பலத்த காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று நிகழ்ந்தது.

---

திருக்கேதீச்சரம், புதன்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இன்று திருக்கேதீச்சர ஆலயத்தில் 8-ம் திருவிழாவைப் பொறுப்போற்று நடத்துகின்றது. நாளைத் திருவிழாவை கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் நடத்துவார்கள்.

## மாநகரசபை கூட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பொம்மையாக இருந்து பல பதவிநீக்கங்களையும் புதிய நியமனங்களையும் செய்துள்ளார். இவைகள் அங்கத்தவர்களின்கௌரவத்தைபாதிப்பதாகும். இக்குற்றங்களினால்தான் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தோம்.

### இது முறையல்ல !

திரு. கே. எஸ். நடராசா பிரேரணையை பலமாக எதிர்த்துப் பேசுகையில் தமிழரசுக் கட்சியினருடன் தாங்கள் தோளோடு தோள் நின்று பல இயக்கங்களிலும் ஒத்துழைத்து வந்ததாகவும் வயதால் முதிர்ந்த தகுதியான ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது முறையல்லவென்றும் கூறினர்.

### சமசமாஜக் கட்சி

### ஆதரிக்கும் காரணங்கள்

திரு. என். தேவபாலசுந்தரம் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் தொழிலாளரை வேலைநீக்கம் செய்த பெரிய குற்றத்திற்காகவே இப்பிரேரணையை ஆதரிப்பதாகவும் பதவியில் வைக்க யார் முக்கியமானவர்களாக இருந்தார்களோ அவர்களாலேயே தூக்கியெறியப்பட்டு விட்டாரென்றும் கூறினர்.

திரு. பி. எஸ். சோமசுந்தரம் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் மாநகரசபை முக்கிய நிர்வாக விஷயங்களில் மாநகர சபைத் தேர்தலில் தோல்வி கண்ட ஒருவரின் புத்திமதியைக் கேட்டு அங்கத்தவர்களின் விருப்பத்தை மேயர் கவனிக்கத் தவறிவிட்டார் என்று குறிப்பிட்டார்.

### 'சிங்களவர் முன் தமிழர் பிரச்சினை'

திரு. ஏ. ஜி. இராஜசூரியர் பிரேரணையை எதிர்த்துப் பேசுகையில், தமிழர்களுக்கிடையே ஒற்றுமையை நிலைநாட்ட முடியாமல் தமிழரது பிரச்சினையைச் சிங்களக் கமிஷனர்முன் தீர்ப்பதற்கு முயல்கிறார்களெனவும், இந்நிலைமையினற்றான் சிங்களவர் இன்னமும் தமிழரை ஆட்சி செலுத்த முனைவதாகவும், அழகாக உடுத்தி வீதிக்குக் கொண்டுவந்துவிட்டு துகிலுரிவது அழகாள வேலையல்லவென்றும், இப்போதைய மேயர நேர்மையாக நடந்திருக்கிறார் ஆகையால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில், மாநகரசபை நிர்வாகம் என்ற யானையை சரியாக எவராலும் அறிந்து கொள்ள முடியாமல் இருப்பதாகவும் குருடர் யானையை அளவிட்ட கதையாகவே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

ஹாஜி. வி.எம்.எம். அபுசாலி, திரு. எஸ். இராசரத்தினம் ஆகியோரும் பேசினர். திரு. ஜோன் பிரேரணையை ஆதரித்துப் பேச ஆரம்பித்த சில நிமிஷங்களில் மின்சாரக் கோளாறு ஏற்பட்டது. விவாதம் அத்துடன் ஒத்திவைக்கப்பட்டது.

# தேசிய அபிவிருத்தி வரிக்கு எம். பி. க்கள் தயக்கம்

கொழும்பு, செவ்.

தேசிய அபிவிருத்திவரியைச் செலுத்துவதென்று கடந்தவருடம் பார்லிமெண்டில் கூறிய அரசாங்க எம். பி. க்கள் தங்களது முடிவைமாற்றிக்கொண்டுவிட்டார்களா? இந்தக் கேள்வி எதிர்க் கட்சி வட்டாரங்களில் எழும்பியுள்ளது

தேசிய அபிவிருத்திவரியைச் செலுத்துவதென்று அரசாங்க பார்லிமெண்ட்குழு முடிவுசெய்ததற்கிணங்க, அதை அமுல் செய்யும்படி ஜனப்பிரதிநிதிகள் சபை குமாஸ்தாவிடம், தெரிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் குமாஸ்தா அந்த முடிவுக்கிணங்காது, தேசிய அபிவிருத்திவரி செலுத்துவதுபற்றிய அபிப்பிராயங்களைத் தமக்குத் தெரிவிக்கும்படி தனிப்பட்ட முறையில் அங்கத்தவர்களைக் கேட்டிருந்தார். இதுவரை நியமனம் செய்யப்பட்ட எம்.பி. க்களான திரு. ஆர். சிங்கில்டன்சால்மன், திரு. ஆர். எஸ். வி. பவுலியர் ஆகிய இருவருமே சம்மதம் தெரிவித்துள்ளனரெனத்தெரிகிறது.

## மகாராணியின் காரில் அழகுராணி

ஹொறணை, செவ்வாய்

வகிருற 14-ம் தேதி ஹொறணையில் தெரிவு செய்யப்படும் புதுவருட அழகுராணி இலங்கையில் எலிஸபெத் மகாராணி பிரயாணம் செய்த "கடிலாக்" காரில் பிரயாணம் செய்வார். இப்போட்டியை நடத்தும் ரய்கம் கோர்ரள புதுவருட வைபவக் கொண்டாட்டக் கமிட்டி இப்போது ஒரு காணிச்சொந்தக்காரருக்குச் சொந்தமாய் இருக்கும் குறித்தகாரைப் பெற்று ஹொறணையிலிருந்து இரத்மலானைக்கு அழகுராணியை அழைத்துச் செல்லும். அங்கிருந்து அனுராதபுரம் திரும்ப "ஏர் சிலோன்" ஒரு இலவசடிக்கெட்டை அழகுராணிக்கு அளிக்கும்.

---

கூப்பன் இல: 2

### வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..........

கல்லூரி ..........

எனது பெயர் ..........

விலாசம் ..........

* இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.


புகழ் மணக்கும் சித்திரைப் புத்தாண்டின் விருந்து!
மக்கள் கண்குளிர இதயம் மகிழ வருகிறது!
சினிமாஸ் திரைகளில்
இலட்சியம்! தியாகம்!! ஏக்கம்!!!
மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான இலக்கியப் படைப்பு!



சிவாஜி கணேசன்
பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
வி. நாகையா – டி. எஸ். பாலையா
மனோரமா – கருணநிதி
ஆகியோர் நடித்த
சரவணா பிலிம்ஸ்
பாலும் பழமும்
சங்கீதம் — விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன் ஏ. பீம்சிங்

3-வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு)
சித்திரா – அசாத் நடித்த
ஜிம்போ
(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30-க்கு
எம். ஆர். ராதா – சௌகார்ஜானகி நடித்த
உலகம் சிரிக்கிறது

மனோகரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30 க்கு
சத்தியன், பிரேமா நடித்த
நீலக்குயில்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.